# திராவிடநாடு

24—9—61 | வார வெளியீடு | விலை 16 காசு


## நாம் பிறந்த நாடு நமதாகவேண்டும்

—[ப. வரதராசன்]—

நாம் பிறந்த நாடு
தாய் தந்தை வீடு
நலம் காண வேண்டின்
தனி யாக்க வேண்டும் (நாம்)

அம்மா கற்றுத் தந்த
அருமை மொழித் தமிழ்
பெருமை பல பெற்றும்
அரியணை யேற வில்லை (நாம்)

தங்கக் கனி வயல்கள்
தரத்தில் உயர்ந்த மணிகள்
நிறைய இருந்தும் கூட
வறுமை நீங்க வில்லை (நாம்)

நாள் முழுதும் உழைத்து
நாட்டு வாட்டம் போக்கும்
நல்ல மக்கள் வாழ்வு
நலம் காண வில்லை (நாம்)

பிறந்து வந்த பிள்ளை
அறிவு பெறப் பள்ளி
மேலை நாட்டைப் போல
இங்கு வளர வில்லை (நாம்)

பிறந்து வந்த மனிதன்
பெருமை இழந்து வழியில்
பிச்சை எடுக்கும் நிலைமை
இன்னும் மாற வில்லை (நாம்)

எங்கோ எங்கோ பிறந்து
இங்கு வந்து வாழும்
அந்த நாட்டு மக்கள்
துரத்தப் பட வில்லை (நாம்)

சொந்த மென்று கூறி
பந்த மாகப் பேசும்
நம்ம நாட்டு மக்கள்
இன்னும் உணர வில்லை. (நாம்)


அறிவக நூல் நிலையம்
5, மந்தவெளி சந்து மயிலை,

# வெற்றிக்கோலம்!

லர் 20 ] ஆண்டு சந்தா ரூ. 8 (24—9—61) தனிப்பிரதி 16 காசு [ இதழ் 8

திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்குள்ளாகத் தாங்கிக்கொண்ட தாக்குதல்களும், ஏச்சுக்களும் பேச்சுக்களும், கேலியும் கிண்டலும் கணக்கிலடங்கா. எனினும், தன் பயணத்தை — விடுதலை முழக்கத்தோடு, எந்த இயக்கமும் வளர முடியாத வளர்ச்சியை விரைவிலேயே ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

கழகத்தின் வளர்ச்சி, மாற்றார்க்கு மருட்சியையும், ஆட்சியாளர்க்கு அதிர்ச்சியையும் தரத்தக்க வகையிலே ஏற்பட்டுள்ளமைக்குக் காரணம், கழகத்தின் கொள்கை வலிவே தவிர வேறல்ல! சோடைபோகாத, சொத்தையாகாத கருத்துக்களைக் கொள்கையாக்கித், தன் பயணத்தைத் தொடங்கு நடத்திவருகிறதென்பதை அறிந்தும் அறியாதவர்களைப்போல் ஆட்சியாளர்கள் அலட்சியப்படுத்தி, அதன் பலனை அவ்வப்போது அறுவடை செய்துதான் வருகிறார்கள்! குலக்கல்வித் திட்டப் போராட்டம், கல்லக்குடிப் போராட்டம், இரயில் நிறுத்தப் போராட்டம், 1958-சனவரி 6-ல் பண்டிதருக்குக் கறுப்புக்கொடி காட்டிய நிகழ்ச்சி, கோடம்பாக்கம் இந்தி எதிர்ப்பு மாநாட்டு நிகழ்ச்சிகள் எல்லாம், ஆட்சியாளர்தம் அறுவடைக்கு இலக்கான நிகழ்ச்சிகள் -கழக வரலாற்றிலே மறக்கவியலா நிகழ்ச்சிகள் ஆகும்.

அடுக்குமலைத் தொடர்போல் அடுத்தடுத்துப் பல்வேறு தோல்விகளைத் தொட்டணைத்து மகிழ்ந்த ஆட்சியாளர்கள், இந்த ஆண்டு அடக்குமுறைச் சட்டத்தை நீட்டி, கழகத்தின் விடுதலை விழா நாளைக் கொண்டாட முடியாமல் செய்துவிடத் துடித்தனர். ஆனால், பொதுச் செயலாளர் அவர்கள் ‘‘ஊர்வலத்தை நடத்த உத்தர விட்டுவிட்டேன்’’ என்று குறிப்பிட்டதும் கோட்டையிலே இருந்தவர்கள் கீழே வந்தார்கள்; ஊர்வலத் தடைச் சட்டம் நீக்கப்பட்டது. ஊர்வலம், கண்டோர் வியக்கும் வண்ணம், மிகச் சீரோடும் சிறப்போடும், இருவண்ணக் காட்சியோடு நடைபெற்றது. சென்னை மாநகரமே வியந்தது! ‘‘கழகத்துக்குச் செல்வாக்கு இன்னும் இவ்வளவா இருக்கிறது? யார் யாரோ? என்னென்னவோ பேசினார்கள், எழுதினார்களே......! அத்தனையும் உண்மை கலவாதவைகள்தானா......?’’ என்று நல்லவர்கள் வியப்புக் குறியையும், வினாக்குறியையும் எழுப்பினார்கள்! சென்னை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில், புரசையில் இருந்து வந்து சேரும் சாலையில் — நேரு பார்க்கில் நின்று பார்த்தபோது ஊர்வலம் கடந்துசெல்ல 90 நிமிடங்களுக்குமேல் ஆயிற்றென்றால், ஊர்வலத்தின் சிறப்பை — அந்தக் கண்கொள்ளாக் காட்சியை எப்படி எழுதிக்காட்டவியலும்? ‘‘பார் சிறுத்தலின் படை பெருத்தவோ, படை பெருத்தலின் பார் சிறுத்தவோ’’ என்ற கலிங்கத்துப் பரணியின் வரியைத்தவிர வேறென்ன எழுத இயலும்?

ஊர்வலம், ஊரார்கண்டு வியக்கத்தக்க முறையில்! அதுவும் எவ்வித சலனமுமின்றிக் கட்டுக்கோப்போடு, கண்ணியத்தோடு, கடமை தவறா முறையில் நடைபெற்றதென்றால், கழகத்தின் கட்டுப்பாட்டுணர்ச்சியைப் பற்றி எழுத வேறென்ன தேவை இருக்கிறது!

இந்த ஊர்வலத்தில், கடல் கடந்த நாட்டில், குறிப்பாகப் பர்மாவில் இயங்கிக்கொண்டிருக்கிற தி. மு. கழகத்தினர் கலந்துகொண்டிருக்கிறார்கள் என்றால், கழகத்தின் கொள்கை, இங்குமட்டுமல்ல, ஒரு காலத்தில் வெற்றிக்கொடி நாட்டிய கடாரத்திலும் ஒலித்துக்கொண்டிருக்கிறதென்பதைக் கூறவும் வேண்டுமோ? கடாரத்தவர்களும் கலந்துகொண்டார்கள் என்கிறபோது, எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது, நமக்கு! நம்முடைய பாராட்டுதல்களைக் கடாரத் தோழர்களுக்கு உரித்தாக்குவோம்!

கடல் கடந்த நாட்டவர்களும் கலந்துகொண்ட அந்த ஊர்வலம் ஏறத்தாழ ஐந்துகல் நீளம்! அதில் 20,000-க்கு மேற்பட்ட சைக்கிள்கள்! நூற்றுக்கு மேற்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்கள்! மாடு பூட்டிய நூற்றுக்கு மேற்பட்ட டிரக்கு வண்டிகள்! மோட்டார் வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள்! இத்தனையும் பெற்று அலங்காரத்தோடு அல்ல, அல்ல! கருத்து விளக்கம் தாங்கிய அட்டைகளோடு, கேலிச் சித்திரங்களோடு, ஆட்சியாளர்தம் அடக்குமுறைக் காட்சிகளோடு, வந்தன!

அந்த ஊர்வலத்தில் நெஞ்சைத்தொட்டு, மக்களின் கையொலியைப் பெற்றவை இரண்டு காட்சிகள்! ஒன்று, ஆட்சியாளர்கள் குடிசையைப் பிய்த்தெறியும் கொடுமையை, வண்டியில் குடிசைகட்டி, அதைப் பிய்த்தெறிவதையும், தாய்மார்கள் தடுத்து அவலக்குரல் எழுப்புவதையும் அப்படியே நடித்துக்காட்டியது! அதை அடுத்த நிகழ்ச்சி, காங்கிரசார் கழகக்காளையைத் தாக்குவதும், காவலர் அங்கே அந்தக் காங்கிரசுக்காரருக்குப் பக்கபலமாக நின்றுகொண்டிப்பதும் ஆகும்! இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் உள்ளபடியே உள்ளத்தைத் தொட்டு உலுக்கியதென்றால், வியப்பதற்கில்லை!

இவைகளைப்போலவே, வளர்ந்த ஆலமரத்திலிருந்து சில சருகுகள் விழுவதையும், அந்த மரம், சருகுகள் விழுந்துவிட்டதனால் பலம் குன்றாது நிற்பதையும் சித்தரித்திருந்த காட்சியும், மற்றமற்ற வண்டிகளில் அலங்கரித்த கேலிச் சித்திரங்களும் நெஞ்சத்தை ஊடுருவிச் சென்றன!

இத்துணைச் சிறப்புடன் நடந்தேறிய ஊர்வலத்

( 13-ம் பக்கம் பார்க்க )

காஞ்சீபுரம்
24 9—'61.

தம்பி!

களத்தில் கடும்போரிட்டுக் களைத்துப்போன வீரன், ஆற்றோரத்தில், அந்திசாயும் நேரத்தில், படுத்தபடி, எதிர்ப்புறம் நடமாடிக்கொண்டிருந்த எதிரிநாட்டுப் படையினரைக் கண்டு, கலங்கினுன்; மனம் பாடுபட்டது; ஏதேதோ எண்ணிக்கொண்டான்; விழித்த நிலையிலேயே கனவு காண்கிருன்—என்று குறிப்பிட்டிருந்தேன். அவன் எண்ணம் என்ன என்று அறிய ஆவலாக இருந்திருப்பாய் என்பது தெரியும்; தெரிந்து? என்னை என்ன செய்யச்சொல்கிருய்? சென்ற கிழமை ஓய்வே இல்லை! தரப்படவில்லை!! இப்போது மட்டும் என்னவாம்! உனக்கு மடல் தீட்டிக்கொண்டிருக்கிறேன்—துவக்கு கிறேன்—கீழே, சித்தாத்தூர், தூசி, உக்கல், வெங்களத்தூர் என்று ஊர்ப் பெயர்களையும், அங்கு செல்லவேண்டிய நேரம் பற்றியும், வடாற்காடு வட்டத் தோழர்கள் பேசிக்கொண்டிருக்கிருர்கள். திருமண வீட்டிலே சாப்பாட்டுக்கு எப்போது அழைப்பார்கள்—சாப்பிடாமல் போய்விட்டால் சங்கடப்படுவார்கள்—நேரமோ அதிகமாகிறது—எப்போது அழைப்பார் களோ—என்று எண்ணியபடி, எதிர்வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தபடி, கலியாணவீட்டையே பார்த்தபடி இருப்பது உண்டல்லவா? அடிகள், அப்படி உட்கார்ந்துகொண்டிருக்கிருர், எதிர்த்திண்ணையில். எனக்கு உள்ள கஷ்டம் தெரியும்; எனவே வற்புறுத்த மனம் இடம் தரவில்லை; ஆனுல் தம்பிக்குக் கடிதம் இல்லை என்ருல், தவிப்பு ஏற்படுகிறது, அதனையும் கவனித்தாகவேண்டும், அந்த நிலையில் அடிகள்!

ஆனுல், இந்த நிலை இன்னல் நிரம்பியதாகுமா? கன்னலைத் தின்னும்போதுகூடத் தான், இரத்தம் கசியும்படியான குத்தல் ஏற்பட்டுவிடுகிறது.

ஆற்றோரம் இருக்கிருனே, ஆற்றல் மறவன், அவன்நிலை, இன்னல் நிரம்பியது.

தாயகம் தாக்கப்படுகிறது; துடித்து எழுகிருன்; போரிடுகிருன்; எதிரியிடம் படைபலம் மிகுதி; பலர் மடிந்தனர்; சிலர் சிதறியோடினர்; சிலர் இவன்போல், பதுங்கிக் கொண்டுள்ளனர், நல்ல வாய்ப்பை எதிர்பார்த்தபடி.

என்னென்ன எண்ணம் தோன்றும் அந்நிலையில், வீரனுக்கு?

"நமக்கேன் இந்த வீண்வேலை! எவன் இந்த நாட்டை ஆண்டால், நமக்கு என்ன? அவனவன் பிழைப்பு அவனவனுடைய உழைப்பைப் பொறுத்து இருக்கிறது! கொடி மரத்திலே, எந்தக்கொடி பறந்தால்தான் நமக்கென்ன? கொலு மண்டபத்திலே எவன் கோலாகலமாகக் கொலுவிருந்தால்தான் நமக்கென்ன? நாமுண்டு, நமது உழைப்பு

# பட்டப் பகலில்.....!

உண்டு! நாம் பணிந்துவிடுவதுதான் நல்லது. காட்டு மிருகம்போல், பதுங்கிப் பதுங்கி, பயந்து பயந்து, இருப்பதைவிட, தோல்வியை ஒப்புக்கொண்டு, வென்றவன் நாடாளட்டும் என்று இருந்துவிடவேண்டியதுதான்'' என்று எண்ணுவான். அவ்விதம் எண்ணுபவன், வீரனு? வீரமரபினன் ஆவானு? ஒருக்காலும் இல்லை.

உறங்கவில்லை! விழித்தபடி கனவு காண்கிருன். ஒரு கனவு அல்ல; பல; மாறி மாறி!!

ஒரு அடவி! அடர்ந்த காடு. எதிரிப்படைப் பிரிவின் தலைவன் முகாம் ஒருபுறம்! அதற்குச் சற்றுத் தொலைவிலே படை வீரர் தங்கியிருக்க அமைக்கப்பட்டுள்ள பாசறைகள்—சிறுசிறு அளவில்!

தலைவன் முகாமுக்குள் இருந்து சிரிப்பொலி! இசையொலி! கையொலி! வளையொலி!

இவன், முகம் சிவக்கிறது! வெற்றி பெற்றுவிட்டோம் என்ற மமதையில் மதுவும் மங்கையும் தேடி, மகிழ்ச்சி வெறி கொள்கிருன், இந்த, மடையன்!! ஆடிப் பாடிப் பிழைக்கும் எவளையோ இழுத்துவந்து, பொழுது போக்குகிருன்! நம் நாட்டில்!! நமது நாட்டுப் பெண்ணுெருத்தி நமது நாட்டை வீழ்த்தியவனுக்கு,...... செ! எப்படித் தாங்கிக்கொள்வது?

"ஆடு!'' என்பான்; அவள் ஆடுவாள்! மறுக்கவா முடியும்! கத்தி கட்டாரி கரம் கொண்டிருந்த என் போன்ருர்களே, காடுமேடு பதுங்கி இருக்கும் நிலை! அவள் என்ன செய்வாள், பாவம்!! ஆடுவாள்! இவன் பாடுவான்!

"ஆடாதே! நிறுத்து! நமது நாட்டை நாசமாக்கியவன் முன்பு, ஏ! பெண்ணே! ஆடிடுவது தகுமா!! நாட்டுப் பற்றற்றவளே! நமது கோட்டையை அழித்தான். கொலு மண்டபத்தைக் குலைத்தான்! மன்னனைச் சிறையிட்டான்! வீரர்களைக் கொன்று குவித்தான்! அடி விவரம் கெட்டவளே! அவன் அமர்ந்திருக்கிருனே, வேலைப்பாடு மிகுந்த பட்டு விரிப்பு, அது நம்முடைய அரசியாரின் பொற்கரங்களால் ஆக்கப்பட்டது!! அதன்மீது, அவன்! மாற்ருன்! மதிகெட்ட மாதே! மதுக்குடம், அதன்மீது!! அரசியாரின் அருமைக் குமாரர் இருவரும், ஒருவரோடு ஒருவர் மற்போர் நடத்தி இந்தப் பட்டு விரிப்புமீதுதான், உருளுவார்கள்–அரசியார், கைகொட்டிச் சிரிப்பார்கள்! அந்தப் பட்டு விரிப்புமீது எங்கிருந்தோ வந்தவன், இறுமாப்புடன் இருக்கிருன். இளித்தபடி, அவன் எதிரே நின்று, ஆடுகிருய்! ஆடாதே! நாட்டின் மானம் போக்காதே! ஆடற்கலை பயின்ருய், இந்த அக்ரமக்காரனுக்காக அல்ல!! ஆடாதே! ஓடு! களம் நோக்கிக் கடுகி ஓடு! நமக்காக, நமது நாடு காக்க, மரபு காத்திட, மானம் காத்திட, போரிட்டு மடிந்தனர் உடன்பிறந்த உத்தமர்கள்! பிடிசாம்பலாகிப் போயினர்!! அந்தச் சாம்பற் குவியலின் மீது நின்று ஆடு,; நாடு அழிந்ததுபற்றி அழுது கொண்டே ஆடு! எதிரியின் தலைகளைக் கொய்து, கீழே போட்டுக், கரலால் துவைப்பதுபோல ஆடு! கால்கள் ஓயும் வரை ஆடு! களைத்துக் கீழே விழும்வரையில் ஆடு! ஆடிக்கொண்டே கிட! ஆவி போகும் வரையில், ஆடியபடி கிட! அங்கு! இடுகாட்டில்! கழுகுகளும் நரிகளும் வட்டமிடும் இடத்தில்! உடலைக் கொத்தும், கழுகு; இவன் நமது உரிமையைக் கோத்தி அழித்துவிட்டவன்! உதிரம் குடிக்கும், நரி; இவன், மது குடிக்கிருன்; நமது நாட்டு மானத்தைக் குடித்துவிட்டோம் என்ற மண்டைக் கனம் கொண்ட நிலையில்! இவன் முன் ஆடாதே! ஆடாதே!

ஆமாம்! ஆடமாட்டேன்! வெட்டிச் சாய்க்கட்டும், துண்டான கால்கள் துடிக்கட்டும், கரங்கள் துடிக்கட்டும், அந்த நாட்டியத்தைக் காணட்டும்! உயிரோடு இருக்கும் நான், ஆடமாட்டேன்!! இந்த நாடு, என் நாடு! இந்த மண், இந்த நாட்டு மக்களுடைய இரத்தம், வியர்வை, கண்ணீர் பட்டுப்பட்டு, மணம் பெற்றுவிட்டது; புனிதமாகிவிட்டது. இதிலே, குழந்தையாகத் தவழ்ந்தேன்; குமரியாக நடந்தேன்; இன்று கூலிக்காரியாக ஆட முனைந்தேன்! நல்ல நேரத்திலே வந்தீர்கள், எனைத் தடுக்க! நான் ஆடப்போவதில்லை! நாட்டைப் பிடித்துவிட்டோம் என்று இறுமாந்து கிடக்கிருன்; இவன் இடிபாடுகளையும், பிணங்களையும்தான் காண வேண்டும்; மாளிகைகளையும், அங்கு அடிமை நிலையில் உலவும் ஆடவரையும் பெண்டிரையும் அல்ல. நம்முடையதாக இருக்கும் வரையில்தான், நாடு! மாற்ருனிடம் சிக்கினல், நாடாகுமா? காடு! சுடுகாடு!!

அங்கம், தங்கம்!—என்றனர், அழைத்து வா, என்றேன்! இழுத்துவந்து நிறுத்தினுர்கள்! என் மடியில் இருக்கத் தக்கவள்தான், என்று எண்ணினேன்! அடி, ஆடிப்பிழைப்பவளே! வலிவிழந்ததால், நாடிழந்தான்! திறமைமிகுதியால் வெற்றி வீரனுனேன்! அவன் ஏதோ உளறுகிருன்; அவன் உரைகேட்டு, ஆடுவதை நிறுத்திவிட்டாயே! ஆகுமா இந்த அகந்தை!! மாற்ருனின் மண்டையைப் பிளந்த கரங்கள் இவை! மலரணையில், உன் கால்களை வருடத் தயாராக உள்ளன!! பொறிபறக்கும் கண்ணினுய்ப் போர்க்களத்திலேசுற்றினேன்; வெற்றி பெற்றேன்; காலமெல்லாமா, கரியுடன் கரிபோரிடுவதை, கால்கை இழந்தவர்கள் துடிதுடிப்பதைக் கண்டபடி இருப்பது; கண்களுக்குக் கனிவு வேண்டாமா! உன்னைக் கண்டேன்! பாலைவனம் நடந்துசென்று, நெடுந்தொலைவில், பனி நீரோடையைக் கண்டவன்போலானேன்! அள்ளிப் பருகப்போகும்போதே அது கானல் நீராகிடவாவேண்டும்!! அவன், அனுபவமற்றவன், பிழைக்கத்தெரியாத,அப்பாவி! நாடாம்! பற்ரும்! மரபாம்! மாண்பாம்! பொருளற்ற வார்த்தைகள்! இவன் நாட்டிய இலட்சணம் தெரியாதா, எனக்கு? எங்குபார்த்தாலும் பொட்டல்காடுகள்! எவரும், கடினமாக உழைத்தாக வேண்டும். பொன்விளையும் பூமியோ இது!! அது, எங்கள் நாடு! பொன்! முத்து! பவழம்! வீரம்! வெற்றி! செல்வபுரி!! அங்கு, கொடிபிடிக்கும் வேலையில் அமர்ந்தாலும் நிம்மதியாக வாழலாம். அதை அறியாமல், அவன் உழல்கிருன்; அவன் உளறுவதுகேட்டு, நீ, ஆடலை நிறுத்திவிட்டாய்!! ஆபத்தைத் தேடிக்கொள்ளாதே! அழிவைக் கூவி அழைக்காதே! உயிரோடு இருக்கிறவரையிலேதான், அழகு, இளமை, துடிப்பு, எல்லாம்! பிறகு, பிணம்! காக்கைக்கும் கழுகுக்கும்! மண்ணுக்கும் நரிக்கும்! நான், காக்கை கழுகு, நரி ஆகியவைகளைவிடக் கேவலமா!! உன் எழிலை நான் ரசிப்பேன்—கழுகும் நரியும், உன் சதையைப் பிய்த்துத்

தின்னும். எனக்கு உன் இன்மொழி போதும், சுவை தர! அவை உன் இரத்தத்தை அல்லவா குடிக்கும்!! எனக்கு விருந்தானால், எந்நாளும் உனக்குத் திருநாள்! அவைகளுக்கு விருந்தானால் பிறகு மறுநாள் என்பது உனக்கு ஏது? வாடி, வடிவழகி! வட்டநிலா முகத்தழகி! தொட்டால் போதுமென்று எட்டிநின்று ஏங்கிடும் ஏந்திழையார், எத்தனையோ பேர்களுண்டு. எதனையும் அறியாமல், எனைவிட்டு விலகுகிறாய்!! குறி தவறிப் போகாது. களத்திலே மட்டுமல்ல!!

ஐயோ!! அடப்பாவி!! இதயத்திலே பாய்ந்து......

வீரன் வீசிய கட்டாரி மார்பிலே பாய்ந்துவிட்டது; படைத்தலைவன் மார்பிலிருந்து, இரத்தம் குபுகுபுவெனக் கிளம்புகிறது; கீழே சாய்கிறான்!

ஆடலழகி ஓடோடி வருகிறாள், வீரனிடம்.

வீரர்கள், இருவரையும் பிரிக்கிறார்கள்.

சிறை! தூக்குத்தண்டனை! பலமான பாதுகாப்பு ஏற்பாடு!!

தூக்குக்கயிற்றினை எடுத்து முத்தமிட முனைகிறான், மாற்றானை வீழ்த்திய பெருமையுடன் மடிவது மாவீரனுக்குப் பெரும் புகழ் என்ற எண்ணத்துடன்.

கண்களை ஒருகணம் மூடுகிறான்; அவளைக்காண; மனக்கண்ணால்!

திறக்கிறான்! அவளே எதிரே நிற்கிறாள்! முத்தமிடத் துடித்திடும் அதரம் தெரிகிறது!! கனவு—பட்டப் பகலில்!

இளைஞன்! எனவே, நாட்டின் நிலைகுறித்து உள்ளத்து எழுந்த வேதனையினூடேயும் அவன் ஆடலழகியைக் காண்கிறான். ஆனால், அவளும், ஆதிக்கக்காரனை எதிர்த்து நிற்கும் துணிவுபெற்றவளாகிறாள்—இளைஞனின் நினைப்பு அப்படி.

இளைஞன் அல்லாமல் ஒரு முதியவர், நாட்டுக்கு வந்துற்ற கேடுபற்றி உள்ளத்தில் எழும் வேதனை கொண்ட நிலைபெற்றார் என்றால், அவருடைய நினைப்பு—பட்டப்பகலில் அவர்காணும் 'கனவு' ஆடலழகி பற்றியதாக இராது — நாட்டுப் பெருமையுடன் தொடர்புகொண்டதாக இருக்கும்.

தம்பி! நேற்றுமாலை மடல் எழுதிக்கொண்டிருக்கும் போதே குறிப்பிட்டிருந்தேனல்லவா—வடாற்காடு மாவட்டத்தோழர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று. சென்றுவந்து, பிறகுதான் எழுதுகிறேன். சென்ற ஊர்களிலே ஒரு சிற்றூரின் பெயர் ஐம்படையூர்—இப்போது பெயர், மருவிகொச்சையாகிவிட்டிருக்கிறது; உச்சரிப்பில், சிற்றூர்! அங்கு நான் நமது கழகக்கொடியினை ஏற்றிவைக்கும்போது இரவு மணி பதினொன்று. சிற்றூர் என்றேன், தம்பி! சிறப்பான வரலாறு இருக்கிறது அந்தச் சீரூருக்கு.

வடபுலத்து மன்னன் புலிகேசி என்பானை, இங்கிருந்து படை எடுத்துச்சென்று தோற்கடித்து, வாதாபி எனும் நகரை அழித்து, வெற்றிவாகை சூடிய, பல்லவப் பெரும்படைகள் ஐந்து, திரும்புகாலையில், இந்தச் சிற்றூரில், தங்கி இருந்தனவாம்!! கூத்தனூர் என்பவர், ஐந்து படைகட்கும் இங்கு, தங்கியிருக்க வசதிகளைச் செய்தளித்தாராம்.

நள்ளிரவில், திராவிடநாடு திராவிடருக்கே! என்ற முழக்கமெழுப்பியபடி, அந்தச் சிற்றூரில், நமது கழகத் தோழர்கள் அணிவகுத்துச் சென்றனர். அந்தச் சிற்றூருடன் இணைந்துள்ள வரலாறுபற்றி அறிந்திருந்த எனக்கு, என்ன நினைப்பு எழுந்திருந்திருக்கும் என்பதை விளக்கவா வேண்டும்.

சிறுசிறு குடில்கள்! செல்வம் கொழிக்கும் இடமல்ல! சேறும் சகதியும் நிரம்பிய வழிகள்! ஈச்சை, பனை, முட்செடிகள், புஞ்சைக்காடு, வயல், இவை உள்ள நிலை! அங்கு, முன்னே இருவர் வழிகாட்ட, பின் இருந்து பதின்மர் தள்ளிவிட, உளைச்சேற்றில் புதைந்திடாமல் உருண்டுசெல்லும், மோடாரில், நாங்கள் செல்கிறோம்.

இந்த வழியிலே, ஐந்துபடைகள், வாகை சூடிய படைகள், வாதாபியை வென்ற படைகள், பவனிவந்தனவாமே!—என்று எண்ணினேன்—என் மனக்கண் முன், கரியும் பரியும், தேரும் திருவும், கட்கமேந்தியோரும் கட்டியம் கூறுவோரும், முரசுகொட்டுவோரும் கவிதை புனைவோரும், கொடிகளும் தோரணங்களும், வடுக்களைக்கொண்ட வீரர்களும் அவர்கள் கொண்டு வந்த பொருட்களும், தெரியவில்லை என்று எண்ணுகிறாய். மிகநன்றாகத் தெரிந்தன! வெற்றிபெற்ற படைகளை, மக்கள் வரவேற்கும் ஆரவாரம், வாழ்த்தொலி கூடத்தான், செவியிலே வீழ்ந்தது! செல்வதோ, சேறு நிரம்பிய பாதையில், பழையதோர் மோடாரில்! நினைப்போ, வெற்றி ஈட்டிய வேற்படையினர் விழாக்கோலம்பூண்டு, அவ்வழி நடந்த வரலாறுமீது!!

இடமும் நேரமும், இயல்பும் தொழிலும், பருவமும் மனப்பக்குவமும், நோக்கமும், எங்ஙனம் உளதோ, அதனைப் பொறுத்து, பாரதியார் குறிப்பிட்ட, பட்டப்பகலில் காணும் கனவு இருக்கிறது.

அந்தக் கனவும், காண்பவரின் களிப்பு சிறப்பு, வாய்ப்பு வல்லமை என்பதுபற்றியதாக இல்லாமல், பொது நலனுக்கு உகந்ததாக, நாட்டு நிலையினை உயர்த்துவதாக, மக்களுக்கு மாண்பளிப்பதாக இருப்பின் மட்டுமே அது பாராட்டப்பட வேண்டியதாகிறது. அப்படிப்பட்ட 'கனவுகள்' உலகு திருத்தப்படத்தக்க உணர்வுகளை, வேகத்தை, திறமையைத் தந்தன.

கனவுதானே! கண்ணாடிக் கடைக்காரன் கனவு தெரியுமல்லவா, என்று கூறிக் கெக்கலிசெய்திடத் தோன்றும், நுனிப்புல் மேய்ந்திடும் போக்கினருக்கு. ஆமாம் தம்பி! அப்படி ஒருகதை உண்டு, அறிந்திருப்பாய். அல்நாஷர் எனும் பெயரினன்; அங்காடியில் கண்ணாடிக்கடை நடத்திவந்தான்; பகற்போதினிலே, உறங்கினான்; கனவுகண்டான். கண்ணாடிக் கடையில் இலாபம் குவிகிறது—குன்றுபோல்! பெரிய இடம்! பெரியகடை! மலைபோல இலாபம்! மாடமாளிகை! எடுபிடி! பட்டுப் பட்டாடை! வாகனாதிகள்! ஊரே, ஏவலுக்குக் காத்து நிற்கிறது! அரசன் அறிகிறான்! அவன் மகளையே தருகிறான்! அரண்மனையில் வாசம்! அந்தப்புறம்! அம்சதூளிகாமஞ்சம்! கால்வருடுகிறாள் மன்னன் மகள்! காலை உதறுகிறான், அல்நாஷர்! கண்ணாடிச் சாமான்

கள், உடைபடுகின்றன! கனவு கலேகிறது! பெருநட்டம் ஏற்பட்டது கண்டு, கனவுகண்ட அல்நாஷர் கதறு கிருன். இது கதை! இதைக்காட்டிப் பகற்கனவு வீண் நட்டம் கொடுக்கும் என்ற பாடம் புகட்ட முனே கிருர்கள்.

தம்பி! இந்தக்கனவுக்கும், பாரதியார் குறிப்பிட்டா ரென்று சொன்னேனே அந்தக் கனவிற்கும், அடிப் படையில் உள்ள மாறுபாடு, கவனித்தனேயா? **அல்நாஷர்** கண்ட கனவு, அவன் உயர்வுபற்றி!! நான் விளக்கிக்கொண்டு வருகிற வகைக் கனவுகள், காண் போருக்குக் களிப்பும் உயர்வும், இலாபமும் சுவையும் தருவன அல்ல; மக்களுக்கு, நாட்டுக்கு, நிலேமைதிருந்து தற்கு! மாண்பு, இதிலேதான் இருக்கிறது. இத்தகைய கனவு காண்போர், புத்தம் புதிய உணர்வுகளே மற்றவர் பெறச்செய்கின்றனர்.

பல்வேறு நாடுகளிலே, பல்வேறு காலங்களிலே, இத்தகு கனவுகள் கண்டனர் பலர்; சிலர் கவிதைக ளாக்கினர்; சிலர் கருத்துமிக்க ஏடுகள் தீட்டினர், எதிர்காலம்பற்றி! அப்போதெல்லாம், அவைகளின் உட்திறம் அறிய இயலாதார், எள்ளிநகையாடினர். "கனவு காண்கிருன்! பகற்கனவு!" என்று கேலி செய்தனர்.

பாலேவனம் சோலேவனமாக வேண்டும்! அங்கு பசுங்கிளிகள் கொஞ்சி விளேயாடவேண்டும்! கோலமிகு மயில்கள் ஆடிடவேண்டும்! கோதையுடன் கூடி இசை பயின்றிடவும்வேண்டும்!!—என்று கனவு கண்டோர்கள் பலர்.

வேதனே தரும் நிலேயில், நாடு இருக்கும்போது விம்மிடுவர் சிலர்; சிலர் கொதித்தெழுவர்; சிலர் இந்நிலே மாறி நல்லதோர் நிலே எழாதா என்று ஏக்க முற்று, எண்ணிப்பார்ப்பர்; அந்த எண்ணத்திலே ஓர், 'எழிலுடை எதிர்காலம்' தெரியும்; அகமும் முகமும் மலரும்; அருங்கவிதையோ, உணர்ச்சியூட்டும் உரை நடையோ உருவெடுக்கும்; உலகுக்கு ஒருபுதிய உணர்வு கிடைக்கும்.

மக்கள் குறித்தும், நாட்டு ஆட்சிமுறை குறித்தும், இத்தகைய கனவு கண்டவர்கள், எழுதியுள்ள ஏடுகள் பல மேனுடுகளிலே காணக்கிடக்கின்றன!

**சர் தாமஸ் மூர்** என்பவர் யுடோபியா — Utopia என்ருேர் நூல் எழுதினுர்; ஒரு நாடு எங்ஙனம் அரசாளப் படவேண்டும், மக்கள் எவ்விதம் இருக்கவேண்டும், மதம் எத்தன்மையினதாக இருத்தல்வேண்டும், தொழில் முறைகள் எவ்வண்ணம் இருக்கவேண்டும், என்பன பற்றி எல்லாம், அவர் மனதிலே உருவாகிய கருத்துக் களே உள்ளடக்கிய ஏடு, அது.

யுடோபியா எனப் பெயரிட்டார், அவர் காணவிரும் பிய முறைகள் திகழ்ந்ததாக ஒரு தீவினேக் கற்பனே செய்து.

யுடோபியா என்று மூர், தமது கற்பனேத் தீவுக்குப் பெயரிட்டார் — பெயரிலேயே பொருளும் இழைந் திருந்தது.

யுடோபியா—Utopia எனும், அந்த ஆங்கிலச் சொல்லுக்கு மூலம், இரண்டு லத்தீன் மொழிச் சொற் கள். Ou என்ருேர் சொல்; அதற்குப் பொருள்; இல்லாத என்பதாகும். topos என்பது மற்ருேர் சொல், அதற்குப் பொருள், இடம் என்பதாகும். இந்த இரு லத்தீன் சொற்களேயும், ஒரு ஆங்கிலக் கூட்டுச் சொல் லாக்கி இல்லாத இடம் எனும் பொருள்கொண்ட யுடோபியா, Utopia என்று, தமது கற்பனேத் தீவுக்குப் பெயரிட்டார், சர். தாமஸ்மூர்.

இம்முறையினேத் தொடர்ந்து வேறுபலரும், பல் வேறு, கற்பனே நாடுகளே, கற்பனே அரசுகளே, தீட்டி லிட்டுக் காட்டினர்.

இவைகள் யாவும், அவர்கள் பட்டப்பகலில் கண்ட கனவுகள்! அவை பலிக்குமா பலிக்காதா, என்பது; அவைகளுக்காகப் பாடுபட, எத்துணேபேர் முன்வருவர், அவர்தம் தாங்கும் திறமை எத்தகையது என்பதைப் பொறுத்து, இருக்கிறது.

ஒருவன் தன் சுகத்துக்காக, தன் இலாபத்துக்காக, தன் உயர்வுக்காகக் காணும் கனவுகள் — அல்நாஷர் கனவுகள்—மற்றவர்களே, முயற்சி எடுத்துக்கொள்ள வைக்காது. கனவு கண்டவர்களே, எண்ணி எண்ணி ஏங்கவேண்டும், அல்லது முயற்சி செய்து பார்க்க வேண்டும்; அவர்கள் கண்ட கனவு பலித்திட, மற்றவர் கள் பாடுபட முன்வருவர் என்று எதிர்பார்ப்பது பேதமை. பொது நோக்கத்துக்காக, மக்கள் வாழ்வு செம்மை அடைவதற்காகத் தூய நோக்குடன் சிலர் பட்டப் பகலிலே காணும் கனவுகள், பலித்திட, கனவு கண்டவர்கள் மட்டுமல்ல, கூறக் கேட்டவர்கள் முயற்சிக்கலாம்; முயற்சிக்கவேண்டும்; முயற்சித்துமுள ளனர்!

ஒருவன், தன் நலனுக்காகக் காணும் கனவுபற்றி அல்நாஷர் கண்டாலுமே அஃதுபோல—வெளியே எடுத் துரைக்கக்கூடக் கூச்சப்படுவான்! கூச்சத்தை அடக்கிக்கொண்டு கூறினுலும், கேட்போர் கைகொட் டிச் சிரிப்பர், கேலியாக!!

பொது நோக்குக்காக, மக்கள் நலனுக்காக, நாட்டு உயர்வுக்காக, கனவு காண்போர், எழுச்சியுடன் அதனே எடுத்துரைப்பர்; மற்றவர்களும் அதனே மகிழ்ச்சியுடன் கேட்பர்.

கேட்போருக்கு முதலிலே வியப்பும், பிறகு சுவை யும் கிடைக்கும்; மெள்ள மெள்ள, அதனேப் பெறவேண்

டும் என்ற எண்ணம் எழும்—முயற்சியில் ஈடுபட ஆவல் தோன்றும்—ஈடுபட்டபிறகு, உறுதி வளரும்.

எனவேதான், தூய பொதுநோக்குடன் பட்டப் பகலில் கனவு காண்பவர்கள், பிறரைச் சிந்திக்கவும் செயலாற்றவும் செய்து விடுகிறார்கள்.

தம்பி! ஆற்றோரத்தில் களைத்துப் படுத்திருந்த வீரன் கண்ட 'கனவு' அவனைத் தூக்குமரம் அழைத்துச்சென்றது, அல்லவா? அதனால், என்ன பலன்? அவனுக்காகட்டும், அவன் தன் கனவினை உரைக்கக் கேட்டிடும் மற்றவர்களுக்காகட்டும்?—என்று கேட்பாயேல், கூறுகிறேன், அயலான் நாட்டைப் பிடித்துக்கொண்டான் என்றால், அடங்கிக்கிடப்பது, அடிமையாகிவிடுவது என்பதல்ல, ஒவ்வொருவரும், ஆடிப்பிழைப்பவளானாலும், வாட்போர் வீரனானாலும், ஒவ்வொருவரும், தத்தமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்குத் தக்கபடி, வல்லமைக்கு ஏற்றவண்ணம், ஆதிக்கக்காரனை எதிர்த்து ஒழித்திட முனையவேண்டும்—அந்த முயற்சியிலே, உயிர் போவதாயினும்! இந்த அரிய பாடம் இருக்கிறதல்லவா, வீரன் கண்ட கனவில்! அதனை அறிவோர், எத்துணை வீர உணர்ச்சிபெற இயலும் என்பதை எண்ணிப்பார், தம்பி! அப்போதுதான், அத்தகைய கனவுகள் காண்பதால், கிடைத்திடத்தக்க பலன்கள், விளங்கும்.

அடிமையாக்கப்பட்ட ஒவ்வொரு நாட்டிலேயும், விடுதலைபற்றிய கனவுகளைக் கண்டவர்கள், வீரத்தை, தியாக உணர்வை, அவை மூலம், நாட்டு மக்கள் பெற வைத்தனர்—அதனால், அவர்கள் கண்ட கனவுகள் நனவுகளாயின! நிறைவேறின! பலித்தன!

எண்ணிடச் சுவை தருகிறது என்பதற்காக மட்டுமே, நினைப்புகளை ஏற்படுத்திக் கொள்வதும், கேட்போருக்கு இனிப்பு அளிக்கிறது என்பதற்காகவே, சுவைபடக் கூறிடுவதும், பலன் தருவதாக அமையாது. சுவை இருக்கவேண்டும், அதேபோது, பெற இயலும் என்ற எண்ணத்தைத் தரவல்லதாகவும், பெற்றாக வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுவதாகவும், பெறுவதற்காக எந்த இழப்பையும் பொருட்படுத்தக்கூடாது என்ற உறுதியையும் தரவல்லதாக, அந்தக் கனவு இருத்தல் வேண்டும்.

வானவில்லைக் கண்டவன், வியந்து மகிழ்ந்திடுவது, முழுப் பயன் பெறும் செயலாகாது. வானவில்லிலே கண்ட வண்ணங்களை, நினைவிலே கொண்டு, அத்தகைய வண்ணங்களை, மற்றப் பொருட்களிலே ஏற்றிடத்தக்க கலவை முறையினை அறிந்திட முயற்சித்து வெற்றி பெற்றால் மட்டுமே, வானவில்லைக் கண்டதால் ஏற்பட்ட வியப்பும், மகிழ்ச்சியும் முழுப் பயன் அளித்தது என்று கூறமுடியும்.

வீரவரலாற்றுச் சுவடிகளைச் சொல்லழகுக்காக மட்டுமே படிப்போர் வானவில்லைக் கண்டு வியப்போர் போன்றோர்!

வரலாற்றுச் சுவடிகளிலே கிடைக்கும் வீர உணர்ச்சியை, அடிமைத் தளைகளை உடைத்தெறியும் செயலுக்காகப் பயன்படுத்துவோர், வானவில்லிலே காணப்படும் வண்ணங்களை, கலவை முறையால், ஆடைகளிலும் பிற பொருள்களிலும் ஏற்றிப் பயன் காண்போர் போன்றோர்!

ஆகவே, தம்பி! உள்ள நிலைமைகளால் உளம் வெதும்பிச் செயலாற்றவும் சிந்திக்கவும் இயலா நிலை பெற்றுவிடாமல், தன்னலமற்று, பொதுநோக்குடன், நல்ல நிலைமை காண விரும்பி, தூய்மையாளர் கொள்ளும், சுவையும் பயனும் தரத்தக்க கற்பனைதான், பட்டப்பகலிலே காணப்படும் கனவு!

கொடுமைக்கு ஆளானோர், குமுறிக் கிடப்போர், அனைவருமே இத்தகைய கனவுகள் கண்டுவிட முடியும் என்று கூறமுடியாது.

கொடுமைகளைக் கண்டும் மனம் குலையாமல், நிலைமையைச் செம்மைப்படுத்தி ஆகவேண்டும் என்ற துடிப்புக்கொண்டோர் மட்டுமே, எதிர்காலம்பற்றிய, செம்மைபற்றிய, கனவு காணமுடியும்; கண்டனர்; அந்தக் கனவுகள் யாவும் பலித்துமுள்ளன. அதனாலேயே, யார் என்ன செய்யமுடியும்? இவன் நடமாடும் அழிவு அல்லவோ? என்று மக்கள் கண் கசிந்து கரம் பிசைந்து குமுறத்தக்க நிலையினை உண்டாக்கிய கொடுங்கோலர்கள், இறுதியிலே அழிந்தொழிந்து போயினர். அடிமைப் படுகுழியில் வீழ்ந்துவிட்டது நாடு; இனி அது தலைநிமிர்ந்து, தன்மானம் பெற்று, தன்னரசு பெற்று வாழ முடியாது என்று மிகப் பெரும்பாலான மக்கள் எண்ணி மனம் உடைந்துபோன நிலையை உண்டாக்கி வைத்த, ஆதிக்க அரசுகள், கடைசியிலே, அடியற்ற நெடும்பனையாயின! சிட்டுகள் வல்லூறை எதிர்த்தன! சீமான்களைப் பராரிகள் விரட்டினர்! மாளிகைகள் மண்மேடுகளாயின! குப்பைமேட்டுக்காரன் கோலேந்தியைக் குப்புறத் தள்ளினான்! தம்பி! இவைகளெல்லாம், எங்ஙனம் நடைபெற்றன? யாரோ சிலர் கண்ட கனவுகள், இவர்களை உணர்ச்சிப் பிழம்புகளாக்கிவிட்டன!

இறுதி வெற்றி கிட்டும் வரையில், நடைபெறப் போவது குறித்து நாலாறு பேர், கூறி வந்ததைக் கற்பனை என்றும், கவைக்குதவாதது என்றும், காட்டுக் கூச்சலென்றும், பகற் கனவு என்றும்தான், மிகப் பலர் கூறினர்.

அங்ஙனம் கூறிடுவோர், எவரெவர் என்பது குறித்து எண்ணிப் பார், தம்பி! சுவைமிகு உண்மைகள் பல தெரியும்.

அசைக்கவே முடியாது! என்று இறுமாந்து கிடக்கும் ஆதிக்கக்காரன், விடுதலைக்கான முயற்சிகள் உருவாகிக்கொண்டு வருவதாக, எவரேனும் கூறினால், கண் சிமிட்டுவான், கரம் அசைப்பான், கேலிச் சிரிப்பொலியுடன் பேசுவான்; மனப்பிராந்தி என்பான்! மமதை மதியை மாய்த்துவிட்ட நிலை அது.

கற்பனைகள்–கனவுகள் என்பவைகள், பலித்திருக்கின்றன என்ற வரலாறு அறியாதவர்கள், விடுதலை உணர்வு எழுப்பிவிடும் கற்பனையைக் கவைக்குதவாத பேச்சு என்று கருதித் துச்சமென்று தள்ளிவிடுவர்.

விடுதலைக்காகப் பாடுபடுவது நெருப்பாற்றில் நீந்திச் செல்வது போன்றதாகும், என்பது தெரிந்து பீதி கொள்வோர், இழப்புகளுக்குத் தயாராக இல்லாதவர்கள், வெல்வட்டு மெத்தையினர், அல்லது அத்தரத்தினருக்கு வட்டில் ஏந்தி நிற்போர், வெள்ளை வேட்டிகள், அல்லது அதுபோல வெளிச்சம் போட்டுக் கிடப்போர், இவர்களும், விடுதலை உணர்வு எழுப்பிவிடும் கற்பனையைக், கனவு என்று கதைப்பர்! கோழைத்தனத்தை மறைத்திட, மேதாவித்தனம் என்று எழுத்துப் பொறிக்கப்பட்ட சல்லாத் துணியால் தம்மை அலங்கரித்துக் கொள்வார்கள்.

ஒவ்வொரு நாட்டிலேயும் விடுதலைக் கிளர்ச்சிக் கட்டத்திலே இத்தகைய வீணர்கள், இருந்தனர்; விடுதலை வீரர்களை இகழ்ந்துகொண்டு, அவர்தம் இலட்சியங்களைப் பழித்துக்கொண்டு; எழிலுடைய எதிர்காலம் குறித்து அவர்கள் கூறுவனவற்றை, வெட்டிப் பேச்சு என்று பேசிக்கொண்டு, கட்டி வைத்த குக்கல் கண்டவரைப் பார்த்துக் குலைத்திடும் வாடிக்கைபோல இருப்பர்.

தம்பி! ஆதிக்கக்காரனின் கூர்வாள், அடக்குமுறையின் கொடிய கூரிய பற்கள் என்பவைகள் மட்டுமல்ல, இத்தகையோரின் இழிமொழிகளையும், விடுதலை விரும்பிகள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டி வருகிறது! ஏற்றுக்கொண்டுள்ளனர். நஞ்சல்லவா கொடுத்தனர், சாக்ரடிசுக்கு! கல்லால் அடித்தல்லவா துரத்தினர், நபிகள் நாயகத்தை! முள்முடி அல்லவா சூட்டினர், ஏசுவுக்கு!

அவர்களுக்கே அக்கதி என்றால், தம்பி! மிகச் சாமான்யமானவர்கள், மிகப் பெரிய இலட்சியத்துக்காகப் பாடுபட முன் வந்தால், ஏசவா ஆட்கள் இருக்க மாட்டார்கள்!! தாங்கிக்கொண்டனர்! தாங்கிக் கொள்வோம்!! கனவுகள் பலிக்கும்; ஏனெனில் அந்தக் கனவுகள், நமக்கு ஒரு மாளிகை, நம்மைச் சுற்றிலும் ஆலமேற்ற விழியினர், நம் எதிரில் பேழைகள், அவைகளிலே அணிபணிகள், என்ற இம்முறையில் அல்ல!

நம்மை நோக்கி வாட்கள்! நமது பிடரியில், ஆதிக்கக்காரனின் கரம்! கரமா? பார், தம்பி! எனக்கு ஏற்படும் எண்ணத்தை, கரம் என்கிறேன் — கரந்தாலாவது நெட்டித் தள்ளட்டும் என்று; கரமல்ல, தம்பி! கரம் அல்ல! ஆதிக்கக்காரனின் கால்! நமது உடலில் புண்—கசையடியால் ஏற்பட்டவை! நமது இருப்பிடம், சிறை எனும் இருட்டறை! நமக்குப் படுக்கை, வைக்கோல் தூவப்பட்ட அல்லது அதுவுமற்ற கட்டாந்தரை! நமக்குக் கலயம், மண்ணாலானது! அதிலே உள்ளது, புழுத்தது புளித்தது, அழுகல், நாற்றம் நிரப்பியது!!— இவைபோன்ற இன்னல்கள் நம்மை எதிர்நோக்கி இருப்பது தெரிந்தும், நாடு தன்மானம் தழைக்கும் இடமாக, தன்னாட்சிக் கூடமாகத் திகழவேண்டும் என்றல்லவா எண்ணுகிறோம். எத்துணை ஆத்திரம் பிறக்கும், ஆதிக்கக்காரர்களுக்கு. உறுமுகின்றனர்! அந்த உறுமலைக் கேட்டுக் குலைநடுக்கம் கொள்பவர்கள், நம்முடன் எங்ஙனம் இணைந்து இருக்க இயலும். நாடு மீட்டிடும் நற்பணியிலே ஈடுபட்டிருக்கும் நம்முடன் இருக்க, கூடிப் பணியாற்ற இயலாதார், தமது இயலாமையையா வெளியே எடுத்துரைப்பர்!! கூச்சமாக இருக்குமல்லவா? எனவே அவர்கள், நமது எண்ணம் ஈடேறாது, திட்டம் வெற்றிபெறாது, கற்பனை கவைக்குதவாது, கனவு பலிக்காது என்று பேசித்திரிகின்றனர். வேறென்ன செய்வர்!

தம்பி! அரவம் கேட்டதும் அச்சம் கொண்டு, தலையை ஓட்டுக்குள் இழுத்துக்கொள்வது ஆமைமட்டுமல்ல, சில ஆடவரும் உளர்!!

ஆமையாவது, தன்னடக்கத்துடன், தன் நிலைமை பற்றி வாதிடுவதில்லை. வாய்மூடிக்கிடக்கிறது. இவர்கள் ஆமையா! ஆடவர்களல்லரோ! ஆர்ப்பரிக்க, வாயும் இருக்கிறதே!! ஆர்ப்பரிக்கக்கூட முன்வருகின்றனர்! வாய்! பேசத்தானே!! இதைத்தான் பேசவேண்டும், இப்படித்தான் பேசவேண்டும், பேசுவதிலே பொருத்தம் இருக்கவேண்டும், பொருள் இருக்கவேண்டும், என்று கவனிக்கமுடியும்!! பேச, வாய்! எனவே பேசுகின்றனர்!!

தம்பி! 'இயலாமை' காரணமாக, சிலர், இலட்சியத்தை, தூய்மையாளர்களின் எண்ணங்களை, கற்பனைகளை இகழ்ந்திடுவர்: பொருட்படுத்தாதே! இதனை உனக்குக் கூறவே, பட்டப் பகலில் காணும் கனவுபற்றிப், பாட்டுக்கொரு புலவன் பாரதியடா! என்று நாட்டுக் குரியர் கூறிப் பாராட்டிடும் பாரதியாரின் பாடலை நினைவு படுத்தினேன். மற்றோர்முறை அந்தப் பாடலைப் படித்துப்பார்.

அண்ணன்,

# பொலிவுறும் நாள்! ★

மா. பழனிவேலு

ஆங்கனும், செங்நெலும்கலந்துகுலுங்கிட, புன்னகை பூத்துப் பொலிவுற்று விளங்கிட, மன்னவர் பலரின் மாண்புறு அரசும், தென்னவர் மூவர் தீந்தமிழ்ச் சுவையும், இன்னோரன்ன இன்சுவைக் கீதமும், எல்லோரும் போற்ற விளங்கிடும் தமிழக எம் அன்னாய்! அமிழ்தே! ஆருயிரே! பெருந்தகையீர்! பண்பே நம் பழந் தமிழர் பெருமைகளைக் காணீர்:

கங்கை நதி தீரத்திலே கவிபாடினான், கவிதையூர்க் காவிரியின் ஓரத்திலே நீராடினான்; பைந்தமிழ் சிங்க நிகர் தமிழர்தன் தீரத்தினை உண்ணும்போது பங்கமில் நமக்கெலாம் பாயுதே உவகை நீர். ஆராய்ச்சி மணிகட்டி ஆண்ட சோழன் ஊராட்சி நடத்தாமலா வாழ்ந்தான். தன்னைப் பழித்தனன் என்றதோர் சேதி கேட்டு, பழித்தது தன்னையல்ல, படையொடு போவோம். முன்னை நம் குலத்தினையே பழித்தனன். விடேன், வடவராம் அம்முடவரின் வாலறுத்து, வீறுகொண்டு, கடையராம் அக்கனக விசயனை கல்லேற்றி வருவோமெனச், சமயத்தைக்கைக்கொண்டு சாடினானங்கு, இமயத்தே கொடிதனை நிறுத்தினான் ஓர் மன்னன். கொவ்வைக்கனியினைக் கொடுக்கவும் கூசுமே நமக்கு. ஔவைக்கொருகனியினைக்கொடுத்தனன் அதியமான். அள்ளிக்கொடுக்கவும்அஞ்சாத அம்மன்னன் நெல்லிக் கனியீந்து நெடும் புகழ் பெற்றனன். அரசாளப் பிறந்தேன் அந்தகோ சாத்தனாரே! அரசுரிமையிழந்து துய்க்கிறேனிக்காடு தன்னில், ஆண்ட சமயத்து வந்திருந்தால், அள்ளிக்கொடுத்திருப்பேனே! இப்போதும், அதோவென் கைவாள் எடுத்திடுவீர் கரந்தனில்! இதோ வென்சிரம் கொய்திடுவீர் என்றால், வேண பொருள்கிட்டும் தம்பியிடம் நீட்டினால், நாணப்படாதீர் பறையறிவித்திருக்கிறானெனத் தமிழ் வாழத் தலைகொடுத்தனன் குமணன் என்றோர் வள்ளல்.

ஆண்மகன்தான் வீரத்தோடு வாழ்ந்தனனல்லன், பெண்மகளும் களங்கம் விளைத்ததில்லையதற்கு, மாற்றான்முற்றுகையிட்டதோர் சேதி கேட்டு, மனம் ஆற்றாது திரட்டினான் படைதனைத் தளபதி. நாட்டுக்கொரு இன்னல் நாமிதோ கண்டோம். வீட்டுக்கொரு பிள்ளை அனுப்புவீர்! என்ற அந்தப் பறைகேட்டுப் பெண்மகள் ஒருவள் தன்னொரு மகனை அறைவிட்டோடிடு, மைந்தனே என்று சூளுரைத்து வேல்கொடுத்தனுப்பினள் அம்மாது. போர் முடித்துத் திரும்பிவிட்ட வீரர்தன்னையணுகி "மைந்தனைக் கண்டீரோ களத்தினில் வயது ஐயிரு ஆண்டுகள் தானிருக்கும்" கேட்டனள். "பயந்தோடி வீழ்ந்தனன் அம்மாவுன்மைந்தன்; மார்புறம் புண்பட்டு மடிந்திருந்தால் மகிழலாம்; அது வேறுபுறம்;வார்த்தைவளர்க்கவில்லை, அம்மாவுன்மகன் புறமுதுகிட்டான்" என்றவுரைகேட்ட அவளும் வீறுகொண்டு "அந்தகோ என்மைந்தன் பெரும்பிழை செய்திட்டான். குலப்பெருமை அழிந்தது. கொற்றவனின் தமிழ்ப் பெருமை வீழ்ந்துபட்டது. என் வயிற்றில் பிறந்தானே அவ்வீனமகன். இனியானும் இருப்பதுவும் தொலைவதும் ஒன்றுதான். எடுங்கள் அக்கூரியவாள் தன்னை ஏகுகிறேன் களம். கொடுங்கள் அவன் கொலையுண்ட இடம்போக. பாலீந்து வளர்த்த இம்மார்புதனை அறுத்தெறிவேன், பாலகன் புறமுதுகிட்டானெனில், அன்றி வாளீந்து மடிவேன் நானும் வகையிலா மைந்தனைக்கண்டு" — என ஓட்டமும் நடையுமாய் ஓடினாள். கண்டனள் மகனைக் களத்தினில் செங்குருதியோட, விண்டனள் வீரன் புறமுதுகிடவில்லையென. அறங்கெட்டுத் துரத்தியதோர் புலிதனைக்கொழிக்கும் முறமெடுத்து விரட்டினாள் வீராங்கனையொருவள். இன்னும். வெள்ளிமணிமுத்து விலையும் பொருளையெலாம், அள்ளிச்சென்று அரும் பொருளீட்டி வாழ்ந்துள்ள தமிழர் தன் பெருமையெல்லாம் மணக்கின்றன ஏடுகளில். சுரங்கம் ஈந்துவிட்ட துள்ளிய தங்கத்தினை, தரங்கம் குதித்தாடும், தாவும்சுருபல, ஆழ்கடல் நீர்சூழ்ந்து அதனை நீள் பெருந்தூரமெனக் கிஞ்சிற்றும் உன்னாது, நாவாய் பல செலுத்தி ரோம் நகர் தெருதனில், பூவாய், பொருளாய் விற்றனர், வணிகம் துய்த்தனர். தமிழகத்து முத்து தனித்ததோர் சிறப்போ? தாருங்கள் அதனையெனப்பொருளீந்து பெற்றுப் பொடியாக்கி உண்டனள் பூங்கொடியாள், அழகு வடிவாக்குமென்று புசித்தாள் கிளியோபாட்ரா.

இதனையெலாம் உன்னும் போழ்து இனிக்கிறதே இதயம், இலங்கைவாழ் தமிழர்களை எண்ணும்போது சிலிர்க்கிறது மனம்? எங்களவர் (இங்குள்ள தமிழர்கள் வடவர் பிடியிலிருந்து) ஈங்குபடும் இன்னல்தனைக் கண்டுதானோ? சிங்களவர் சீறுகிறார் நனிதமிழைக் கண்டு. ஆடும் பம்பரம்போலாட்டுகிறான், தமிழர் ஓடும் இரயிலைக் கவிழ்க்கிறான், நாதியில்லை கேட்க. அங்காடிக் கடைதனைச் சூறையாட, அடுத்து அடிக்கிறான்; பொறுக்கிறான் பொறுமையெனும் போர்வை பூண்டு, துப்பாக்கிச் சூடு பொறுக்கமுடியவில்லை; அந்தகோ பதின்மர் ஆருயிரை மாய்த்தனரே! பொறுப்புரிமை இல்லையெனப் பிதற்றுகிறான்; "உனக்குப் பிறப்புரிமையும் கேளாதே சாவாய் உதைபட்டு. உங்களன்னைத் தமிழுக்கு இடமில்லை ஈங்கு, ஓடுங்களிந்தியா ஒரு நிமிடம் தாளோம்" கூறுகிறான் சிங்களவன்; யாருமில்லைக்கேட்பதற்கு!! சாக்காடு போலிருந்த அத்தென்னிலங்கை தன்னைப் பூக்காடு மணக்க வைத்தோம் — பிறப்புரிமையில்லை. துன்பத்தாலெழுந்த வேக்காடு பொறுக்க விதியிதோ தமிழே முக்காடு போட்டு வருகிறோம் வாழ்வளி தாயே!" என மடல் விடுத்தும் கேட்டனர் இவ்வரசு தன்னை. கடல் விடுத்துச் சென்றுவிட்ட உங்கள் காலமே அதுதான், இடமில்லை ஈங்கும் துரத்துவோம். அங்கேதான் படுங்கள் அவதிதன்னை, அன்றே சென்ற உங்கள் பிறப்புரிமை அங்கேதான்"—என்றே எழுதினர். எடுத்தியம்ப மனம் கூசுதே!

பாகித்தான் அகதிகளுக்கும் பத்தாயிரம் செலவு. பண்பாடுற்ற இந்நாட்டு மக்களுக்கு ஏனோ பிளவு? ஆண்டாண்டுதோறும் அளக்கிறோம் வரி — கோடி கோடியாக! ஆயின் அடைகிறோம் இன்னல் நாம் ஒன்றுகூடி. ஏனடா எழுதுகிறான்? இஃதினை யார் கேட்டது? நமதுள்ளம் தெரியாதோர் யாருளர்? எழுதினால் துயர்போமோ? ஏனிதனை வரைதல் வேண்டும்? பழுதினால் உண்டான பாரங் குறையவே; மன்னிக்க. ஏதேதோ எழுதிவிட்டேன், எண்ணாதீர் கோபம். போதாதோ நாம் பட்ட துன்பம்? பொலிவுறும் நாள் எந்நாள்? அந்நாள்தான் நாம் வடவர் பிடியினின்று விடுபட்டுச் சுதந்திரத் திராவிடனாக, தமிழனாக வாழத் தனியரசு பெறும் நாள்!

★

# உடைப்பு

—[செங்குட்டுவன்]—

காவிரி நீர் கரைகளின் விழிம்பை முத்தமிட்டுச் சென்றுகொண்டிருந்தது. மேட்டூர் தேக்கத்தில் அபாய அளவைவிட ஐந்து அடி அதிக தண்ணீர் காணப்படுவதாகச் செய்தி வந்துகொண்டிருந்தது. கரையருகில் வாழ் மக்கள் பீதியுற்றுக் கலங்கியிருந்தனர், அன்று அமாவாசை, அம்மா மண்டபம் கரையில் மட்டும் கூட்டத்திற்கோர் குறைவில்லை. தங்களை ஈன்றெடுத்த தந்தைக்கும், அவரைப் பெற்றுக் கொடுத்தவருக்கும், தன்னை ஈன்றெடுத்த தாய்க்கும் அவளைப் பெற்றுக்கொடுத்தவளுக்கும் மற்றும் அவர்களிடம் விடைபெற்று, மேலுலகில் இவர்கள் வரவு நோக்கிக் காத்திருப்பவர்களுக்கும், பரிசுப் பொருள்களையும், நல்லெண்ணங்களையும் புரோகிதர் மூலமாக அனுப்ப முயற்சித்துக்கொண்டிருந்தனர். இன்னும் சில அங்குலம் தண்ணீர் உயர்ந்தால், அந்த உலகிலுள்ளோரை இவர்கள் நேராகச் சந்திக்கும் வாய்ப்பே ஏற்பட்டுவிடும். இதைப் பற்றி அவர்கள் நினைத்ததாகத் தெரியவில்லை. புரோகிதரின் உதவியோடு மந்திரத்தை ஓதியவண்ணமிருந்தனர்.

*

ஜல், ஜல் என்ற சதங்கை ஒலியோடு சர்மா வந்து இறங்கிறார், வேண்டிய சாமான்களைக் கையோடு மடிசஞ்சியில் கொண்டுவந்திருந்தார்.

"டேய் முருகா நான் சொல்றது தெரியல்லே, மாட்டை அவுத்து விட்டுட்டுப் பக்கத்திலேயே, நில்லு, நான் வர நேரமாகும்"

"வந்துடுவீங்க இல்லே"

"என்னடா, பேத்தறே, வண்டியைவிட்டு, அந்தப்பக்கம், இந்தப் பக்கம் போயிடாதே"

"வண்டியை யாரும் தூக்கிகிட்டுப் போயிடமாட்டாங்க"

சர்மா மண்டபத்தை நோக்கினார். அம்புஜம்மாள், பின் தொடர்ந்தாள். பாரட்லா சர்மா, எப்போதும் பஞ்சகச்சத்தோடுதான் தோன்றுவார், மார்பிலே மூன்று, வயிற்றில் ஒன்று, கைகளில் இரண்டு, நெற்றியில் ஒன்று. மொத்தம் ஏழு நாமங்கள் உடலை அலங்கரிக்கும், நெற்றியிலே போடப்பட்டதின் உச்சியில் மஞ்சள் காப்பு வைக்கப்பட்டிருக்கும், இது இரங்கநாதர் கோயில் தாயார் சந்நிதியில் கொடுக்கப்படுவது, 'பாரட்லா படித்துவிட்டுப் பஞ்சாங்கமாக இருக்கிறோமே, படித்ததற்கு இழுக்கல்லவா? இதையெல்லாம், எண்ணிப் பார்க்க நேரம்கிடையாது சர்மாவுக்கு.

அமாவாசைக் கூட்டமென்றாலும், சர்மாவுக்கு எல்லோரும் விலகி இடம் கொடுத்தார்கள். ஆகவே மேலிடத்துக்கு அனுப்பவேண்டியவைகளை, அம்மா மண்டபக் கரையின் வாயிலாக முடித்துவிட்டு, சர்மா, சீக்கிரமாகத் திரும்பிவிட்டார்.

"டேய், முருகா, டேய், வண்டியை கட்டுடா"

முருகன் வண்டியைக் கட்டினான். சர்மா, தர்மபத்தினியுடன், ஏறி அமர்ந்துகொண்டார். ஜல் ஜல் ஒலியுடன் வண்டி கிளம்பியது.

"ஏண்டா முருகா, தண்ணி இப்படிப் போகுதே"

"ஆமா சாமி, ஒரே சிகப்பு"

"டேய் அதைச் சொல்லலடா, வெள்ளத்தைச் சொல்றேன்"

"ஆமா எஜமான், அம்மா மண்டபத்திலே உடைப்பு விழுந்தா, நம்ம வீடு எல்லாம், அதோகதிதான்"

"ஏய் அப்படி உன் வாயாலே சொல்லாதேடா"

"வாயினாலே சொன்னா, என்ன எஜமான்"

"அப்படியில்லை, சில நாக்கு, சில மாதிரி, உன்னை மட்டும் சொல்லலை, பொதுவாச் சொல்றேன்"

"என்ன எஜமான், வாய்க்குள்ளாறே இருக்கிற நாக்கு, கரையையா உடைச்சுடப்போகுது"

"ஓட்டுடா வண்டியை, பேசக் கத்துண்டே, நீ—இப்போ…"

வண்டி சர்மா வீட்டு வாசலில் நின்றது.

"டேய் முருகா, மார்க்கெட்டுக்குப் போய் கறி, காய், வாங்கியாந்துடு, சீக்கிரமா."

*

"எஜமான்"

"என்னடா என்னைக் கூப்பிடறே, காயை அம்மாகிட்டே கொண்டு போய்க் கொடுக்கிறதுதானே"

"அதில்லை"

"பின்னே என்ன"

"ஐயனார் கோயிலண்டை கரை உடைஞ்சுட்டதாம். மார்க்கெட்டிலே காய் வாங்குறப்ப சொன்னாங்க"

"அடப்பாவி, ஐயயோ! ஐயனார் கோயில்லே கரை உடைஞ்சா நமக்கெல்லாம் ஆபத்துதானே, ஏண்டி அம்புஜம், என்னடி செய்யறது? சாமான்களையெல்லாம் எங்கே கொண்டுபோறது, அதுக்குள்ளே தண்ணி இங்கே வந்துடறதோ என்னமோ"

"எஜமான் என் வீடு ஐயனார் கோயிலண்டைதானே இருக்கு, என்ன ஆச்சோ தெரியலை. போய் பார்த்துட்டு வந்துடறேன்"

"வீடு என்னடா வீடு, மண் குடிசைதானேடா"

"அதில்லை எஜமான், கருப்பாயி எட்டு மாசம் வயித்திலே, என்ன பண்றாளோ என்னமோ"

"எல்லாம் அக்கம் பக்கத்திலே இருக்கவா கவனிச்சுக்குவா, இங்கே வாடா உள்ளாறே போ"

"ஏங்க எசமான், வீட்டுக்குள்ளேயா"

"வா, வா, ஆபத்துக்குப் பாபமில்லை. படுக்கையறையிலே இருக்கிற மெத்தை துணிமணியெல்லாம் எடுத்து மாடியிலே போடு. ஏண்டி! ஏய், சாமான்களை எல்லாம் எங்கே போடறது. பெரிய ரூம்லே போட்டுடுவோமா, டேய் முருகா வாடா சீக்கிரம், பூஜையறையிலே இருக்கிற

சாமான்களையெல்லாம் வாரிக்கிட்டு வா''

முருகன் வாரிக்கொண்டு 'வந்தான்.

"இரும்புப்பெட்டியைத் தூக்கு, முருகா, கொண்டா, இப்படி கொண்டாந்துடு''

சர்மா பம்பரமாகச் சுற்றுகிருர். முருகனுக்கு தன் மனைவி என்ன கதி ஆனுளோ என்று. ஆனல் முருகன் அதைக் காட்டிக்கொள்ள வில்லை. தன் வீடு என்ன மண் குடிசைதானே, முதலாளி கூறிய தைப்போல். மனதை ஒரு விநாடியில் திடப்படுத்திக்கொண்டு, வேலையில் மும்முரமாக இறங்கினுன். எல்லாச் சாமான்களையும் ஒரு வழியாக வாரி போட்டாகிவிட்டது.

"டேய் முருகா, வண்டியில் ஒரு மூட்டை, அரிசி வைத்துவிட்டாயா, மற்ற எல்லாம் வைத்தாகிவிட்டது. சரி ஓட்டு சீக்கிரம், தண்ணி வருவதற்குள் ஊருக்கு போய்விடவேண்டும்''

இரட்டை மாட்டு வண்டி ஜல் ஜல் என்று பறந்துகொண்டிருந்தது.

"ஓய் சர்மா, என்னுங்காணும் மூட்டை, முடிச்சுகளோட எங்கே கிளம்பிட்டீர்''

"என்னய்யா, அப்படிக் கேட்கிறீர், அய்யனுர் கோயில் உடைஞ்சுட்டதாமே, ஐயா,''

"வெறும் புரளிங்காணும்; நான் இப்ப போய்ப் பாத்துட்டுத்தானே வரேன், வண்டியைத் திருப்பும்''

"டேய் ராஸ்கல் முருகா, வண்டியை திருப்புடா! புரளியா பண்ணினே?''

"அவனைச் சொல்லி என்ன பிரயோசனம்? இந்தக் காலத்தும் பசங்களே, இப்படித்தான்''

வண்டி வீட்டையடைந்தது, வண்டியிலிருந்து இறங்கியதும் சர்மா அவசரமாக அம்புஜத்தை அழைத்துக்கொண்டு வீட்டிற்குள் சென்ருர்.

"என்னடி, இந்த முருகன் வீட்டுக்குள்ளே வந்து நெளிவு, சுளிவுகளை எல்லாம் தெரிஞ்சுகிட்டானே, இனி அவனை வேலைக்கு வச்சுக்கலாமோ''

"ஆமா அனுப்பிச்சுடுங்கோ''

"டேய் முருகா, இங்கே வாடா. புரளி பண்ணி வீட்டுக்குள்ளே நுழையறத்துக்குத்தானே வழி பண்ணினே, எல்லாம் தெரிஞ்சு வச்சுகிட்டா, ஒரு நாள் தேட்டை போடலாம்னு பார்த்துட்டே அவ்வளவு தானே''

"ஐயயோ எஜமான்'!

"போடா வெளியே, வேலை செஞ்சது போதும், போடா''

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க எஜமான்''

"போடா, போ! எப்ப வீட்டுக்குள்ளே காலடி எடுத்து வச்சயோ, அப்புறம் ஒரு நிமிஷம் இருக்கக் கூடாது, போடா''

முருகன் சிறிது யோசனை செய்தான். பிறகு துண்டை ஒரு உதறு உதறினுன். இவரிடம் மூட்டை தூக்குவதை, வேறு எவரிடம் தூக்கினுலும், அவனுக்கு நாலு பணம் கிடைக்காமலா போகிறது! திரும்பி விர்ரென்று வெளியே நடையைக் கட்டினுன். ❀

---

# குறிஞ்சிநாட்டுக் குலக்கொடி

—[கலையரசன்]—

எங்கும் இருள் பரவியது. காலை முதல் மாலை வரை தன் கடமையைச் செவ்வனே முடித்துவிட்டுத் தண்ணொளியை தன்னகத்தே அடக்கிக்கொண்டு மேற்றிசையிலே மறைந்தான் செங்கதிரோன். அந்நேரம் அவன் படைகளும் திரும்பின. களத்திலே வெற்றி கண்ட கரிப் படை, பஞ்சையை பஞ்சாய் நசுக்கிய பரிப்படை, களத்திலே காளைகளை வீழ்த்திப் பல கன்னிகளை கைம் பெண்ணுக்கிய காலாட்படை ஆகிய முப்பெரும் படையின் முன்னேதான் மூர்க்கங் கொண்ட முடிமன்னன் சென்ருன்.

"என்னை எதிர்த்தவர்கள் வாழ்ந்ததாகச் சரித்திரமே கிடையாது! இவர்கள் மட்டும் எப்படி வாழ்ந்துவிட முடியும். என் நாட்டு மக்களென்ருல், என்னை எதிர்த்தால் விட்டு வைப்பேனு! இன்ரேடு என்னை எதிர்த்தவர்கள் ஒழிந்தார்கள். வசைமாரி பொழிந்தவர்களின் வாழ்வை மண்ணோடு மண்ணுக்கி விட்டேன். இனி என்னைத் தூற்றுவாரில்லை போற்றுவாருண்டு. என்னை எதிர்த்த மக்களை எல்லாம் மாக்களாக்கி இரும்புச் சங்கிலியால் பிணைத்து இழுத்துச் செல்லும் காட்சியைப் பார். இனி என்னை எதிர்ப்பவர்கள் இங்நாட்டிலே இல்லை. இன்ருட்டிலென்ன! இந்த உலகத்திலேயே இல்லை'' என்று இறுமாப்போடு எக்காளமிட்டான் குறிஞ்சி நாட்டு மன்னன் குமரப்பன்.

நீதி கேட்கச் சென்று மாண்ட பிணங்களோடு பிணமாகச் சாய்ந்து கிடந்த சாந்தப்பன் எழுந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். எங்கும் பிணமலைகள் குவிக்கப்பட்டிருந்தன. கையை இழந்து கதறுவோரின் குரலும், காலைக் காணுமே என்று கத்துவோரின் குரலும், ஐயோ என் கண்ணெங்கே என்று அலறுவோரின் குரலும் கேட்டுத் திடுக்கிட்டான் சாந்தப்பன். மெல்ல எழுந்து நின்று தன் கைகால்களை ஒருமுறை உற்று நோக்கினுன். பிறகு தன்னேடு நீதி கேட்க வந்த மைத்துனன் வேலப்பன் எங்கே என்று தேட ஆரம்பித்தான். பரந்த வெளியிலே படுகளத்திலே மாண்ட மக்களின் முகத்தையெல்லாம் துருவித்துருவிப் பார்த்தான். அந்த நேரத்தில் அவனுக்கு ஒரு அச்சம் ஏற்பட்டது. மாண்டானே? மீண்டானே? மன்னனிடத்தில் சிக்கினுனே? என்ற அச்சம்தான் அது. மீண்டும் ஒருமுறை தேட ஆரம்பித்தான். கொஞ்சத் தூரத்தில் சாந்தப்பா! சாந்தப்பா!! என்ற குரல் தெம்பிழந்து வந்ததைக் கேட்டான். குரல் வந்த திசையை

நோக்கி ஓடினான். அங்கே அவன் கண்ட காட்சி அவனைக் கற்சிலையாக்கிவிட்டது. கொடுங்கோலாட்சி நடத்தும் குமரப்பனின் கூர்வாள் குடித்துவிட்டது வேலப்பனின் உயிரை. அதைக் கண்ட சாந்தப்பன் "ஐயோ வேலப்பா" என்று வாரி அணைத்தான். "இவ்வளவு நேரம் உயிரோடு இருந்த உன்னைப் பார்க்கக் கொடுத்து வைக்காத பாவியாகிவிட்டேனடா நான். நீதி கேட்கலாம் வாவென்று அழைத்தாயே, நீதியா கிடைத்தது, கிடைக்குமா இந்த அரசிடம் நீதி. நீதி நேர்மையெல்லாம் குழிதோண்டிப் புதைத்துவிட்டு நெஞ்சுயர்த்தும் மன்னனிடமா நீதி கேட்பது? என்ன செய்வேன் என் தங்கை குலக்கொடிக்கு எதைச் சொல்லித் தேற்றுவேன். வேலா விடுதலை வீரனே! நீ விட்டு வைத்த பணியை நான் முடிக்கிறேன். நாட்டு மக்களின் வாழ்வுக்காகத் தன் இன்னுயிரை இழந்த வீரனே! உன்சவத்தின்மேல் ஆணை, கொடுங்கோல் அரசை வீழ்த்துகிறேன்—கொத்தடிமை தகர்க்கிறேன், நம்மவரைச் சூழ்ந்துள்ள ஏகாதிபத்திய இருளை அகற்றுகிறேன்" என்று சூளுரைத்த சாந்தப்பன் தன் வீடு நோக்கி விரைந்தான்.

நீதி கேட்கச்சென்ற மக்களிடம் போர்தொடுத்தான் மன்னன் என்று கேள்வியுற்ற குலக்கொடி குமுறினாள். கதறினாள். காலையிலே நீதி கேட்கச்சென்ற கணவனும் அண்ணனும் மாலை பொழுது சாய்ந்ததும் காணாத காரணத்தால்; கண்ணீர் பெருகக், களையிழந்து கடைவாசல் காத்து நின்றாள் குலக்கொடி. அந்நேரம் வருத்தத்துடன் ஓடிவந்தான் சாந்தப்பன். அண்ணனைக் கண்ட குலக்கொடி "எங்கே அண்ணா என் கணவர்" என்று பதட்டத்துடன் கேட்டாள். எதைச் சொல்வது? எதை மறப்பது? எவ்வாறு சொல்வது? என்று புரியாமல் திகைத்தான் சாந்தப்பன். மறுபடியும் "எங்கேயண்ணா என் கணவர்" என்றாள் குலக்கொடி. "அம்மா என்னை மன்னித்துவிடம்மா, மன்னித்துவிடு! உன் கணவனைக் காத்து உன்னிடம் ஒப்படைக்க முடியாத பாவியாகிவிட்டேனம்மா நான்; என்னை மன்னித்துவிடு குலக்கொடி" என்று தங்கையிடம் கெஞ்சினான் சாந்தப்பன். "அண்ணா என்கணவர் எங்கே அண்ணா, என்ன நடந்தது, கூறுங்கள் அண்ணா?" என்றாள் குலக்கொடி. "அம்மா, குமரப்பனின் கூர்வாள் பாய்ந்து, குவலயத்தைவிட்டே சென்றுவிட்டாரம்மா உன்கணவர்" என்று கூறிவிட்டுக் கோவெனக் கதறிவிட்டான் சாந்தப்பன். இதைக் கேட்ட குலக்கொடி கலங்கவில்லை. கதறவில்லை. கண்ணிலே கசிந்த கண்ணீரைத் தன் புடவைத் தலைப்பால் துடைத்தாள். "கலங்காதீர்கள் அண்ணா, கவலையை விடுங்கள் காளையரைத் திரட்டுங்கள், களம் நோக்கிப் புறப்படுங்கள்" என்று கட்டளையிட்டாள் குலக்கொடி. "கொடுங்கோலனை ஒழிப்போம், கொத்தடிமை தகர்ப்போம். காரிருள் நீக்குவோம் கடமையைச் செய்வோம்" என்றாள். வெகுண்டெழுந்தாள் வெஞ்சினம்கொண்டாள் வீரர்களைக் கூட்டினாள். வேல்விழிகளும் கூடினர். உயரமான மேடையிலேறி அழைத்தாள். "தமிழகத்துமக்களே! தன்னிகரில்லாத் தமிழினத்து மக்களே! ஒன்று கூடுங்கள். உலுத்தரின் ஆட்சியை ஒழிப்போம். புத்துணர்ச்சி பெறுவோம் புதுப்பொலிவு காண்போம். புல்லர்களின் ஆட்சியைப் பொசுக்குவோம். நல்லவர்களின் ஆட்சியை நிறுவுவோம், என்னைப் பாருங்கள், கணவனைக் களத்திலே பறிகொடுத்துவிட்டுக் கைம்பெண்ணாகக் காட்சியளிக்கும் என்னைப் பாருங்கள். என்னை இந்த அவலநிலைக்கு ஆளாக்கிய அரசை வீழ்ந்துவோம். என்னை மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ மங்கையரின் வாழ்வை மங்கச்செய்த மன்னனை வீழ்த்துவோம்" என்றாள் குலக்கொடி. உரக்கக்கத்தினாள். அந்த ஊரே நடுங்குமளவுக்குக் கத்தினாள். வீரர்கள் கூடினர்; வேல்கொண்டு வாள்கொண்டு. வெஞ்சினம்கொண்டனர் மங்கையர் கூட்டமே. ஊரே திரண்டது! நாடே திரண்டது! நகரே திரண்டது. எங்குநோக்கினும் மங்கையர் கூட்டம். மக்களை மதியாத மன்னனை வீழ்த்துவோம். மாசு துடைப்போம். மக்களாட்சி காண்போம் என்று முழங்கியவாறு மன்னனின் மாளிகையை நோக்கி விரைந்தது விடுதலைக்கூட்டம். எங்கும் இருள் சூழ்ந்திருந்த காரணத்தால் கையில் தீவட்டியைத் தாங்கிச் சென்றனர். அதுமட்டுமல்ல, இன்னும் பல ஆயுதங்களையும் தாங்கிச் சென்றனர். படையின் தலைவனாகச் சாத்தப்பனும், படைத் தலைவியாகக் குலக்கொடியும் அணியின்முன்னே சென்றனர். புயலெனச் சென்ற மக்கட்படை. ஒருவாறாகக் குமரப்பனின் கோட்டைவாசலை அடைந்தது.

அது சமயம் பேரிடியும் பெருமழையும்போல் பேரிரைச்சல் கேட்டது. என்னவென்று திரும்பினான் சாந்தப்பன். மக்கள் கூட்டத்தினிடையே மன்னன் படை புகுந்துவிட்டது. அவ்வளவுதான்! குமுறும் எரிமலைபோல், கொந்தளிக்கும் கடல்போல், குமுறிஎழுந்தனர்—விடுதலைக் கூட்டத்தினர். கோட்டைகள் இடிந்தன. கொத்தளங்கள் தகர்ந்தன. கொற்றவனின் படையில் பலர் வீழ்ந்தனர். மாளிகை இடிந்து மண்மேடானது. மன்னனைக்காணவில்லை என்ற செய்தி மக்களிடத்தில் பரவியது. எஞ்சியிருந்த மன்னன் படையினர் மன்னிப்புக் கேட்டனர் மக்களிடம். "மக்களாட்சி வாழ்க, மக்களாட்சி வாழ்க என்ற குரல் வானைப் பிளந்தது. மன்னன்கொடி இறங்கியது. மக்களெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். அடிமைபகன்றது, ஆனந்தம்பொங்கியது. அமைதி நிலவியது. அந்நேரம் அடிவானில் இளம்பருதி ஆர்ப்பரித்தெழுந்து கொண்டிருந்தது. குவலயத்தின் இருளகற்றச் செங்கதிரோன் வந்ததுபோல், குறிஞ்சி நாட்டு இருளகற்றக் குலக்கொடியும் சாந்தப்பனும் வந்தார்கள் என்று குறிஞ்சி நிலத்து மக்கள் குதூகலித்தனர். அது சமயம்கொஞ்சந்தூரத்தில் "ஓ"வென்று சத்தம்கேட்டுக் குரல் வந்ததிசையை நோக்கி ஓடினான் சாந்தப்பன். அங்கே அவன் கண்ட காட்சி அவனைக் கண் கலங்க வைத்துவிட்டது. ஆம், குலக்கொடி சவமாகிவிட்டாள்! விடுதலைக்காகப் பாடுபட்ட வீராங்கனை விடுதலையின் பயனை அடையுமுன்னே விரைந்துவிட்டாள் உலகைவிட்டு. அதைக் கண்ட மக்களெல்லாம் அமைதியோடு அன்னவளின் சவத்திற்கு மரியாதை செலுத்தினர்.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

துக்குக் களங்கம் கற்பிக்க நாளேடு ஒன்று, "மூன்று மாணவர்கள் தாக்கப்பட்டார்கள்" என்று செய்திதந்தது, நல்லவர் இதயமெல்லாம் புண்ணாகும்படி! கடமை காத்த காளையர்தம் நெஞ்சம் நோக, கண்ணியத்தைக் காத்த கழகத்தவர்தம் கண்கலங்க! ஆம். அச்சிறு செய்தி, ஊர்வலத்தில் வந்தவர்களைத் திகைப்பிலும், திக்பிரமையிலும் ஆழ்த்தி வேதனை விளிம்புக்குத்தான் தள்ளியது! "இத்துணைக் கட்டுப்பாடாக, கண்ணியமாக நடத்தப்பட்ட ஊர்வலத்துக்கு இப்படியொரு இழிபெயரா? என்றுதான் வேதனை வாட்டியெடுத்தது!" வெற்றிகரமாக நடந்தேறிய ஊர்வலத்துக்கு உலுத்தர்கள் களங்கம் கற்பித்துவிட்டார்களே!" என்றுதான் விம்மி வெடித்தது நெஞ்சம்!

அமைதியாக ஊர்வலத்தை முடித்துவிட்ட நிறைவால் பூரித்துப் புளகாங்கிதமடைந்த இதயங்களெல்லாம் வேதனைப் பிழம்பாகி, வெடித்துவிடும்போல் இருந்தது! கண்களிலே கண்ணீர்கூட முட்டியதுண்டு! எவ்வளவு பெரிய வேதனையான செய்தி!

ஏக்கப் பெருமூச்சுவிட்டுத், தவறு நேர்ந்துவிட்டதே, கழகத்துக்குக் கறை ஏற்பட்டுவிட்டதே என்று ஏங்கிய நெஞ்சங்களுக்கு, நொந்துபோன உள்ளங்களுக்கு, "கழக ஊர்வலத்தில் கலவரம் நிகழ்ந்ததாக வந்த செய்தி தவறானது. கலவரம் ஏதும் நிகழவில்லை" என்று வெளியான போலீசார் அறிக்கைதான் ஓரளவு நிம்மதியையும், நிறைவையும் தந்தது! இந்த ஒரு நிகழ்ச்சி போதாதா; கழகத்தின்மீது மாற்றார் கொண்டிருக்கும் இழிதகைமைப் போக்கை அறிவதற்கு!

இன்னொரு வேடிக்கையான நிகழ்ச்சியும் நாளேடுகள் சிலவற்றில் வந்திருக்கின்றன! 18—9—61-ல் தினமணி ஏடு, கடற்கரையில் 17-9-61-ல் நடைபெற்ற கூட்டத்தில், பொதுச்செயலாளர் அவர்கள் கலந்து கொண்டாரென்று கூறி, அவர்கள் பேசியதாக. "ஆதி பத்திய உரிமையுடன் கூடிய சுதந்திரத் திராவிடநாடே, திராவிடர்களின் பிறப்புரிமையாகும்" என்றும், "திராவிட முன்னேற்றக்கழகக் கருத்திலுள்ள திராவிடநாடு, தமிழ்நாடு கேரளம்,ஆந்திரம் கன்னடம் நான்கையுங்கொண்டதாக இருக்கும்" என்றும் குறிப்பிட்டதாகக் கற்பனை செய்துகொண்டிருக்கிறதென்றால், பாருங்களேன்! மற்றொரு தேசிய ஏடான "தினச்செய்தி" 18-9-61ல் இதழில் "இக்கூட்டத்தில் ஸ்ரீ. மு. கருணாநிதி, ஸ்ரீ. நெடுஞ்செழியன் உட்படப் பேசினார்கள்" என்று எழுதி இருக்கிறது! பொதுச் செயலாளர் திருச்சியிலே, நாவலர் மதுரையிலே; ஆனால், தேசிய ஏடுகள் எழுதுகின்றன—கடற்கரைக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் அவர்களும், நாவலர் அவர்களும் கலந்துகொண்டதாக! செய்தியைப் படித்தறிந்த மதுரையும், சென்னையும், திருச்சியும் கைகொட்டிச் சிரித்திருக்கும் இந்த நாளேடுகளைக்கண்டு!

நாட்டவர்க்கு நல்ல கருத்துக்களையும் நல்ல செய்திகளையும் தரவேண்டிய நாளேடுகள், தங்கள் கடமை தவறி, எங்கோ சென்று, கற்பனைச் செய்தி தருகின்றன வென்றால், இவைபற்றிப் பொதுமக்களே முடிவுசெய்து கொள்ளட்டும்!

காலம் மாறுகிறது, கருத்தும் விரிகிறது, கழகம் வெல்லும்! கயமைத்தனம் காலவெள்ளத்தில் கண் காண முடியாது மாய்ந்துமடியும் என்பது திண்ணம்! ○

# உத்தமரை இழந்தோம்

கடாங்கா அதிபர் ஷோம்பேயைச் சந்திக்க விமானம்மூலம் சென்ற ஆமர்ஷீல்டு விமான விபத்தில் சிக்கி இறந்தார் என்ற செய்தி கேட்டு, உலகில் நிலையான அமைதி நிலவவேண்டும் என விழைவோர் அனைவரின் உள்ளமும் துடிதுடிக்கின்றது. விபத்துக்காளாகி மரணமடைந்த உத்தமர், உலக நாடுகளின் பேரவைக்குப் பொதுச் செயலாளராக இடம் பெற்ற நாள்முதல், உலகில் நிலையான அமைதி நிலவுவதற்கே, தமது பெரும் பகுதியைச் செலவழித்திருக்கின்றார்.

உலகப் பேரவையின் பொதுச்செயலாளராகப் பணிபுரிந்து வந்த ஒருவர் இறந்துபட்டார் என்பதற்காக மட்டுமே, அவர் மரணத்தைக் கேட்டு உலக நல்லறிவாளர்களின் கண்கள் நீரைச் சிந்தவில்லை. மனிதகுலத்தின் வழிகாட்டிகளில் ஒருவர் எனச் சிறப்பித்துக் கூறத்தக்க வகையில், உலக அமைதிக்காக இதயபூர்வமான அரும்பாடுபட்டு வந்த ஒரு தூயவர்,'அறநெறியாளர் அகால முடிவெய்திவிட்டாரே என்பதினால் தான் இவ்வேதனை.

மீண்டும் ஒரு உலகப் பெரும்போர் மூண்டுவிடக் கூடுமோ என்ற அச்சம், கோர உருவம் பெறவிடாது அச்சம்கொள்ளத்தக்க வகையிலேயே இருந்துவருவதற்கு, ஆமர்ஷீல்டின் அறிவும் ஆற்றலும் நற்பணியும் பொருளாகக்கொள்ளத்தக்க காரணங்களாகும். பிளவுபட்டுக்கிடக்கும் ஜெர்மனியின் பிரச்சினைக்கும், சிக்கலுக்குள் பெருஞ் சிக்கலாக இருந்து வருகின்ற பெர்லின் சிக்கலுக்கும், தீர்வுகாண்பதில், இறந்தவரின் நுண்ணறிவும் பொறுப்பான பணியும், பெரிதும் பயன்பட்டிருக்கும். அவர் இறப்பு, அத்துணைவலிவை, உலக மக்களுக்கு இல்லாதொழித்துவிட்டது.

எந்தக் காங்கோவின் உள்நாட்டுக் குழப்பத்தின் விளைவாக, உலகப் பேரவையின் சார்பில் அவர் எடுக்கத் துணிந்த செயல்முறைக்குக் களங்கம் கற்பிக்கப்பட்டு அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டதோ, அதே காங்கோ நாட்டில் அமைதி காணும் முயற்சியில் அவர் நேரடியாக ஈடுபாடுகொண்டபொழுது, அவருக்கு இவ்வெதிர்பாரா முடிவு ஏற்பட்டிருக்கிறது. மாவீரன் லுமூல்பாவைச் சித்திரவதை செய்துகொன்ற கரங்களே, உலக அமைதி காண்பதில் தம் மனச்சான்று சுட்டிய வழிநின்று, நேர்மையாகவும் திறம்படவும் செயல்பட்டுவந்த இத்தூயவரின் முடிவுக்கும், கருவியாக அமைந்திருக்கக்கூடும் எனத் தகவல் தரப்பட்டிருக்கிறது' அது உண்மையா பொய்யா என ஆராய்ந்து அறிந்து, அறத்தின் நீங்கிய அக்கயவர்கள் நீதிக்குழு முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படல் வேண்டும். இம் முயற்சி செவ்வனே நிறைவேற்றப்படினும், இழந்துவிட்ட உலக சமாதானத் தூதுவரான ஆமர்ஷீல்டு அவர்களை நாம் திரும்பப் பெற்றுவிடப்போவது கிடையாது—அவர் இழப்பால் உலக மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற உள்ளப் புண்ணும் விரைவில் ஆறிவிடப் போவது கிடையாது.

**அண்ணாதுரை,**
பொதுச்செயலாளர் தி. மு. க.
"அறிவகம்" சென்னை 13.

# "இஸ்ரேல்"

—[கி. சோழன்]—

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் தங்களைப்பற்றித் தாங்களே சிந்திக்கத் தொடங்கி, அந்தச் சிந்தனையின் விளைவாக ஒரு புதிய நிலப்பரப்பிற்குச் சொந்தக்காரர்களாகி, இன்று அந்த மண்ணின் முன்னேற்றத்திற்காக எத்தகைய தியாகங்களையும் ஏற்பதற்கும், இப்பூவுலகின் சொர்க்கமாக அதனை மாற்றுதற்கும் தங்களின் முழு நேரத்தையும் செலவிட்டுப் பணியாற்றும் இஸ்ரேல் நாட்டு மக்கள் உலகத்தின் பாராட்டுதலுக் குரியவர்களாவார்கள்!

உலகில் தோன்றிய பழமையான இனங்களிலே ஒன்றுன யூத இனம், இரண்டாவது உலகப்போருக்கு முன்னர் ஒரு கணிசமான அளவு எண்ணிக்கையுடையவர்களாக இருந்தனர்! இட்லரின் பழிவாங்கும் எண்ணத்திற்கு அந்த இனம் பலியானதுபோல், நாகரிக உலகில் வேறு எந்த இனமும் பழி வாங்கப் படவில்லை! போருக்கு முன்னர் ஒரு கோடி மக்களைக்கொண்ட அந்த இனம், இன்று நாற்பது இலட்சம் மக்களை மட்டுமே கொண்டிருக்கிறது! எஞ்சிய அறுபது இலட்சம் பேர் இட்லரின் கொடிய பார்வை பட்டு அழிந்துபோயினர்! தங்கள் இனத்தவர் இப்படி மிருகத்தனமாகப் படுகொலை செய்யப்படுவதையும், அதைக் கேட்பதற்கு உலகில் யாருமில்லாத நிலையும்தான் அவர்களின் சிந்தனையைத் தூண்டியது! இனியாகிலும் உலகெங்கும் பரவிக் கிடக்கும் யூதர்களை ஒன்று திரட்ட வேண்டும். அவர்களுக்கென்று ஒரு நாட்டை உருவாக்கவேண்டுமென்ற எண்ணம் யூதர்களிலே சிலருக்கு ஏற்பட்டது! முயன்றனர்–வெற்றியும் கிட்டியது!

எட்டாயிரம் சதுர மைல்களையும், இருபத்திரண்டரை இலட்சம் மக்களையும் கொண்ட, பாலஸ்தீனத்தின், தெற்கு நெகீவு முதல் வடக்கு ஜஃபா வரையுள்ள இன்றைய இஸ்ரேலை அவர்கள் உருவாக்கியதே ஒரு வேடிக்கையான கதையாகும்; யூதர்கள் தங்களின் வேத புத்தகமான "பழைய ஏற்பாடு" என்ற நூலில் தங்களின் முன்னேன் ஒருவனுக்கு ஆண்டவனலே வாக்களிக்கப்பட்ட இடம் அதுதான் என்று நம்புகின்றனர்! வசதிகள் மிக்க தென் அமெரிக்கா போன்ற பகுதிகளுக்குக் குடியேறும் யோசனைகளையெல்லாம் விட்டுவிட்டுப் பாலைவனமான பாலஸ்தீனத்தில் அவர்கள் குடியேறியதே அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான்!

நான்கு பக்கங்களிலும், சிரியா, லெபனுன், ஜோர்டான், எகிப்து ஆகிய நாடுகள் அமைந்திருக்க, அதன் நடுவில்தான் இன்றைய இஸ்ரேல் உருவாக்கப்பட்டுள்ளது! முழுக்க முழுக்க மணற்காடுகளாக உள்ள அந்த நிலத்தில் யூதர்கள் இன்று மிகுந்த மனதிடத்தோடு உழைத்து வருகிருர்கள்! பலனும் கிடைத்துக்கொண்டு வருகிறது. பாழடைந்து கிடந்த அந்த நிலப் பரப்பு இன்று பசுந்தளிர்ச் சோலையாக மாறிக்கொண்டு வருகிறது! ஆரம்ப முதலே யூதர்களின் குடியேற்றத்தை அங்கு எதிர்த்து வந்த அராபியர் இன்றும் அவர்கள்மீது ஒரு கண் வைத்துத்தான் இருக்கின்றனர்! 1655–ம் ஆண்டு அராபியரின் தாக்குதல் ஒன்றை யூதர்கள் சந்தித்தனர்; அந்தப் போரில் யூதர்களே வாகை சூடினர்! மனித உரிமை காக்கப்படவேண்டும் என்ற நல்ல எண்ணம்கொண்ட உலக நாடுகள் சபை அந்தச் சின்னஞ் சிறிய நாட்டிற்கு உறுதுணையாய் இருந்து அதன் எல்லையைக் காத்தது! இன்றும் காத்து வருகிறது!!

இஸ்ரேலை உருவாக்க உலகின் பல பகுதிகளிலும் சிதறிக் கிடந்த யூதர்களுக்கெல்லாம் இஸ்ரேல் அழைப்பு விடுத்தது—தங்கள் நாட்டிற்கு வாருங்கள் என்று! அதன்படி பெரும் பகுதி யூதர்கள் இஸ்ரேலுக்கு வந்து குடியேறிவிட்டனர். மீதமிருப்போரும் வந்துவிடுவர் என்று அவர்கள் நம்புகின்றனர்! உலகில் உள்ள எல்லா யூதர்களுக்காகவுமே இன்று இஸ்ரேல் சர்க்கார் திட்டமிட்டு நிர்மாண வேலைகளைச் செய்துகொண்டு வருகின்றனர்; எல்லா யூத மக்களையும் கொண்ட சுதந்திர இஸ்ரேலின் புனர் நிர்மாணத்திற்காக அவர்கள் இன்று தங்கள் வாயையும், வயிற்றையும் சுருக்கிக்கொண்டு முழுமூச்சோடு உழைத்து வருகின்றனர்!

தங்கள் நாட்டுப்பற்றுக்கு இஸ்ரேல் மக்களுக்கு இணையாக ஒரு இனம் இன்று உலகில் வேறு எங்கும் இல்லை என்று கூறலாம்! 1948-ம் ஆண்டு யூதர்கள் அனைவரையும் "இஸ்ரேலுக்கு வாருங்கள்" என்று அவர்களின் தலைவர்கள் விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து உலகெங்குமிருந்து இஸ்ரேலுக்கு வந்து சேர்ந்த யூதர்களின் எண்ணிக்கையே அதற்குச் சான்ருகும்! ஒருவேளை அதுவரையில் அவர்களுக்கென்று ஒருநாடு இல்லாமலிருந்து, இப்போது புதிதாக ஏற்பட்டதால், கொண்ட ஆர்வமோ என்னவோ?

வாழ்க்கைத்தரத்திற்கு ஏற்றநிலப் பகுதிகள் இஸ்ரேலில் மிகக் குறைவே! கடற்கரைப் பகுதிகளில் தான் நல்ல மண்வளத்தைக் காண முடியும்; மீதமுள்ளவை அத்தனையும் மணற் காடுகள்தாம்! ஆனல், அந்த மணற்காடுகளைக் கண்டு அவர்கள் அஞ்சவில்லை! "தளராத முயற்சி" என்ற மூலமந்திரத்தை முழங்கியவாறு அந்தப் பாலைவனத்தை அவர்கள் சோலைவனமாக்கிப் புதிய வரலாற்றைப் படைத்துக்கொண்டிருக்கிருர்கள்! ஹாலந்து நாட்டு மக்கள் கடலோடு போராடி வெற்றி கண்டதைப்போல், இஸ்ரேல் மக்கள் பாலையோடு போராடி வெற்றி பெற்றுக் கொண்டு வருகின்றனர்! குளிர் நிலச் சோலையான ஒரு இஸ்ரேலைத் தான் அவர்கள் கனவு கண்டு கொண்டு வருகிருர்கள்! அவர்களின் கனவு நினைவாவதற்கு நீர் நிலை வசதிகள்தான் பெரும் தடையாக இருந்துகொண்டிருக்கின்றன! அந்தத் தடைகள்கூட நீக்கப்பட்டு வருகின்றன; பல்லாயிரக் கணக்கான அடிகள் ஆழத்தில் குழாய்களைச் செலுத்தி, அதன் மூலம் வேகமாக வெளிப்படுகின்ற தண்ணீரைக்கொண்டு பயிற்தொழிலில் வெற்றி பெற்று வருகிறது. நாடோடிகளாகத் திரிந்தோர் தங்களுக்கென்று ஒரு அடி நிலமும்கூட இல்லாதோர்–யூதர்கள் இன்று தனி நாடு பெற்றுவிட்டார்கள்—மன்னிக்கவும் உண்டாக்கிக்கொண்டார்கள்!

எல்லா வரலாற்றுச்சான்றுகளும், பெற்ற திராவிட இனம் தனக்கென்று ஒரு நாடில்லாமல் அனைவரையும் வெளி நாடுகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறது. இஸ்ரேலின் வரலாற்றைப் படிக்கின்ற நாம் உறுதி கொள்வோம்! தனிநாடு காண்போம்!

★

# கலிங்கத்துக் கைதி

சென்ற இதழ் தொடர்ச்சி...

**காட்சி 3**

இடம்:- காஞ்சியில் உள்ள சித்திர மண்டபத்தின் வெளிவாயிலுக்கு எதிரேயுள்ள வட்டமான நிலப்பகுதி.

உறுப்பினர்கள்:- (ஆண்கள்) குலோத்துங்கன் — கருணாகரத் தொண்டைமான், முடிகொண்ட சோழன், வானகோவரையன் — புலவர் செயங்கொண்டார். மற்றும் குறுநில மன்னர்கள் — நால்வகைப் படை வீரர்கள், மற்றும் பற்பல போர்வீரர்கள். (பெண்கள்) குலோத்துங்கனின் இல்லக்கிழத்திகளான ஏழிசைவல்லபி — தியாகவல்லி — கருணாகரத் தொண்டைமானின் மனைவி மணவாளினி. அரச மகளிர் பலர்.

நிலைமை:- [போர் முரசின் ஒலி திக்கெங்கிலும் கேட்டுக்கொண்டிருக்கிறது. அப்பொழுது அரசன் குலோத்துங்கன் தன் பரிவாரங்களுடன் வருகிறான். அப்பொழுது சோழ நாட்டு வீரன் ஒருவன்]

சோழ நாட்டு வீரன் ஒருவன்:- (உயர்ந்த குரலில்) சோழ நாட்டுக் காவலன் குலோத்துங்கச் சக்கரவர்த்தி.

அனைவரும்:- வாழ்க!

சோழ-வீர-ஒரு:- தளபதி வண்டையர் கோனாகிய கருணாகரத் தொண்டைமான்!

அனை:- வாழ்க!

சோழ-வீர-ஒரு:- புலவர் செயங்கொண்டார்!

அனை:- வாழ்க!

சோழ-வீர-ஒரு:- சோழமண்டலம்!

அனை:- அது எங்கள் நாடு! நம் நாட்டின் புகழ் என்றும் நின்று நிலவட்டும்!

சோழ-வீர-ஒரு:- புலிக்கொடி!

அனை:- புவியெங்கணும் பட்டொளி வீசிப் பறந்திடட்டும்!

குலோத்:- என் அன்புக்கும், தமிழ்ப் பண்புக்கும் சிறந்து விளங்கும் எனதருமை தமிழ்ப் பெருங்குடியினரே! சோழநாட்டு வீரர்காள்! கலிங்கத்துத்தார்வேந்தன் அழைக்கிறான் நம்மைச் செருமுனைக்கு! பொங்கியெழும் மறவர் படையினரே பொறுத்தது போதும்! போருக்குத் தங்கு தடையின்றிக் கிளம்புமின்.

கருணா:- (வீர உணர்ச்சியுடன்) வேந்தே!

**அருளாளன்**

குலோத்:- கருணாகரரே! (ஏழிசைவல்லபியையும்—தியாகவல்லியையும் நோக்கி) வல்லபி–தியாகவல்லி, போருக்குப்பொங்கியெழும் புதுமறவன், நாட்டின் திருமறவன், நாடு காக்கும் நல்லதோர் வீரமறவனுக்கு நெற்றியில் திலகமிட்டு வெற்றியுடன் திரும்பி வருக! வருக! என வாழ்த்துங்கள். (ஏழிசைவல்லபியும்–தியாகவல்லியும் கருணாகரனுக்கு நெற்றியிலே திலகமிடுகின்றனர். அப்பொழுது சோழ வீரன் ஒருவன்)

சோழ-வீர-ஒரு:- தானைத் தளபதி கருணாகரத் தொண்டைமான்!

அனை:- வாழ்க!

ஏழிசைவல்லபி:- தளபதியாரே! வல்லமை பொருந்திய சோழ நாட்டினரே! போரிலே புல்லர்களைப் புறமுதுகு காட்டச் செய்து நல்லோர் புகழும்படி நாடு திரும்புங்கள். வெற்றி நமக்கே கிட்டட்டும்!

கருணா:- அறம் வளர்த்த நாட்டின் அன்னையரே! தமிழனின் மறம் இன்னும் மாண்டுவிடவில்லை. மானத்தைக் காப்பது நம் தென்னாட்டு மறவர் குலம். அந்தத் திருக்குலத்தாரை இகழ்ந்துரைத்தவனை — கலிங்கத்துக் காவலன் அனந்தவன்மனை — வடவனை — உருத்தெரியாமல் ஆக்கிவிட்டு வெற்றி வீரனாக வருகிறேன். (ஏழிசைவல்லபிக்கு அருகில் நின்றுகொண்டிருக்கும் மணவாளினியை நோக்கி) மணவாளினி!

மணவாளினி:- அத்தான்! சென்று வாருங்கள்! செருக்களம் நோக்கி! படைத் தளபதியாகச் சென்று கலிங்கத்தின் உடைமைகளைப் பறித்து வெற்றிக்கொடி பொறித்துவிட்டு வாருங்கள்.

குலோத்:- கருணாகரரே! போர்க்குல மறவர்களே! நம் தாய் நாட்டின்—தமிழகத்தின் — தன்மானத்தைக் காக்க–இந்தத் தங்கத் தரணி பிறருக்கு அடிமைப்படாமல் இருக்க, என் திருநாடு இது. இந்நாட்டை காப்பதுதான் போர்க் குலத் தமிழச்சியின் வயிற்றில் பிறந்த ஒவ்வொரு தமிழ் மகனின் கடமை, என்றுரைத்து, வடவனை வென்றுவாருங்கள்.(முடிகொண்ட சோழரை நோக்கி) முடிகொண்ட சோழரே! அனந்தவன்மனின் ஆணவத்தையழித்து, அவனை என் அடி பணியச் செய்யுங்கள். கருணாகரன் தலைமையில் தென்னாட்டுப் படை வருகிறது என்று கேட்டவுடன், கலிங்கத்துக் காவ

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

லன் பதுங்கும் நாள்தான் நமக்கு நன்னாள். நமக்கோர் பொன்னாள். அதுதான் நமக்கு எந்நாளுமில்லாத திருநாள்.

முடிகொண்ட சோழர்:- (உணர்ச்சி மேலிட்டு) பொன்னித் துறையவரே......

குலோத்:- ஆம்! கலிங்கத்தின் குருதி—உங்கள் வீரக்கைகளிலே உறுதியென இறுதி மொழியுரைத்துப் போருக்கு கிளம்புமின். அறம் வளர்த்த நாட்டின் மறவர் படையினரே! அரசுகூறிய ஆணை கேட்டு முரசு முழங்கட்டும். முடி அதிரட்டும்! மலைகுலைந்தாலும் நிலைகுலையாத மறத்தமிழரே! தங்கத் தமிழகத்திற்குப் பங்கம் வரின், ஒவ்வொரு சிங்கத்தமிழ் மறவனின் அங்கத்திலுள்ள ஒவ்வொரு துளி குருதியும் பகைவர் முன் போரிட்டுக்கொண்டிருக்குமென வீரவரிகள் உரைத்து, வெற்றி! வெற்றி! எனக்கூறி விரைந்திடுக வீரர்களே செருமுனை நோக்கி! கலிங்கத்தின் கானரணையும்—மலையரணையும்—கடலரணையும் ஒழித்து—கலிங்கப் படைகளை அழித்துவிட்டு வெற்றியுடன் வருமின். ஆஹா!......என் தமிழ் நாட்டிற்கு, கல்லும் மண்ணும், தோன்றுவதற்கு முன்னே தோன்றிய நெஞ்சையள்ளும்—வள்ளுவன் தந்த திருக்குறளின் பெருமையை எடுத்துக்கூறும் என் தமிழகத்திற்கு, மானம்போன தென்றல் உயிர்போச்சு! இனியென்ன பேச்சு! நமக்கு என வீர வஞ்சினத்தை வழங்கி — கூறி— கிளம்புமின்! பொன்னித்துறையவனுக்கு—புனல்நாட்டானுக்கு திறைகட்ட மறுத்த அனந்தவன் மனை—அந்த "கலிங்கத்துக் கைதி"யைப்பிடித்து அவனது நகரையும் —பொருள்களையும் திக்கிரையாக்கிவிட்டுத் தமிழகம் திரும்புமின். வாழ்க சோழமண்டலம். வாழ்க போர்க்குலமறவர்கள் கூட்டம். புறப்படட்டும் பொங்கியெழும் மறவர் படை! அதிரட்டும் முழவு! முழங்கட்டும் முரசொலி! (முரசு ஒலிக்கிறது.)

கருணு:- (புலவர் செயங்கொண்டாரை நோக்கி) புலவரே!

செயங்:- கருணாகரரே! பல்லவர் குலத் தோன்றலே! நாடுகாக்க—நாட்டின் மானத்தைகாக்க—வீறுகொண்டெழும் வேங்கையே! செல்க! செருமுனைநோக்கி! செல்க! செங்குருதி சிந்தவும் சித்தமாயுள்ள செந்தமிழர்காள்! செல்லுமின்! செல்லுமின்! விரைந்து வாரீர்! தமிழன்னை தந்த தார்வேந்தனின் போர் முழக்கம் கேட்டுப், பொங்கியெழும் போர் வீரர்காள், கலிங்கத்தை நோக்கிச் சென்று அந்தக் "கலிங்கத்துக் கைதி"யைப் பிடித்துக்கொண்டு வெற்றியுடன் திரும்புமின்! சென்றுவருக! சோழநாட்டு வீரர்காள் செல்லுமின்! செருமுனை நோக்கி!

கருணு:- புலவர் செயங்கொண்டார்

அனை:- வாழ்க!

கருணு:- குலோத்துங்கச்சக்ரவர்த்தி

அனை:- வாழ்க!

கருணு:- சோழநாடு!

அனை:- அது எங்கள் நாடு எம் நாட்டின் புகழ் என்றும்—நின்று நிலவட்டும்.

கருணு:- புலிக்கொடி!

அனை:- புவியெங்கனும் பட்டொளி வீசிப் பறந்திடட்டும்!

கருணு:- கலிங்கத்தை!

அனை:- அழிப்போம்!

கருணு:- "கலிங்கத்துக்கைதி"யை!

அனை:- சிறைப் பிடிப்போம்!

கருணு:- சோழமன்னர் குலோத்துங்கச் சக்கரவர்த்தி!

அனை:- வாழ்க! வாழ்க! (தமிழர் படை கலிங்கத்தை நோக்கி புறப்படுக.)

முக்கிய குறிப்பு:- குலோத்துங்கன் சோழநாட்டைச் சுற்றிப் பார்த்து வருகையில் காஞ்சியிலுள்ள சித்திர மண்டபத்தில் தங்கியபொழுது சிற்றரசர் பலர் தம் திறைகளைச் செலுத்துகையில் இருமுறை நீட்டோலைவிடுத்தும் உரிய திறையைச் செலுத்தவில்லைக், கலிங்கத்துக் காவலன் அனந்தவன்மன் என்பதையறிந்து, உடனே தன் படைகளை வண்டையர் கோனாகிய கருணாகரத் தொண்டைமான் தலைமையில் அனுப்பிவைத்து, கலிங்கத்துக் காவலன் அனந்தவன்மனை — கலிங்கத்துக் கைதியை சிறைபிடிக்கச் சொல்கிறான். இந்த நாடகத்தில் கவிஞர். செயங்கொண்டார் கற்பனை உருவில் உள்ளே நுழைந்தவர். சரித்திர நிகழ்ச்சிகளைக்கொண்டு பின்னப்பட்ட கற்பனை நாடகம் இது.

## "விண்ணப்ப நோய்"

மக்கள், தங்களுடைய குறைகளைத் தங்கள் சார்பில் வாதாடிப் பெற்றுத் தரும் தலைவரிடமோ, அதிகாரியிடமோ, அல்லது நேரடியாகச் சர்க்காரிடமோ விண்ணப்பித்துக் கொள்வதுதான் வழக்கம்.

ஆனல், இப்போது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது.

யார், குறைகளைத் தீர்க்கும் நிலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்களோ, அவர்களே குறைகளை விண்ணப்பித்துக்கொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

கேரள கவர்னர், கிரி அவர்கள் இதுபோன்ற நிலைக்குத் தாம் தள்ளப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.